Vol. XXXIII

1958—1959



# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

முப்பத்துமூன்றும் சிலம்பு

௧௯௮௧—௧௯௯௦

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.,
Tirunelveli. :: Madras-1.

[All Rights Reserved]

[Price Rs. 6-00

# 'செந்தமிழ்ச் செல்வி'

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்
## EDITORIAL BOARD MEMBERS


க. திரு. செந்தமிழ்க் காவலர், டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், எம். ஏ., பி. எச். டி.

உ. „ சித்தாந்த கலாநிதி, வித்துவான், ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

ங. „ பேராசிரியர், மு. இராசாக்கண்ணனார் அவர்கள், பி. ஓ. எல். (ஆனர்சு), எம். இ. எஸ்., இந்திய மொழித்துறைத் தலைவர், மலேயாப் பல்கலைக் கழகம், சிங்கப்பூர்.

ச. „ செந்தமிழ்க்கலைமணி, வித்துவான், பண்டித. கா. பொ. இரத்தினம் அவர்கள், பி. ஏ., (ஆனர்சு), எம். ஏ., பி. ஓ. எல். (சென்னை) அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

ரு. „ கு. பரமசிவம் அவர்கள், பி. ஏ. (ஆனர்சு), தமிழ் விரிவுரையாளர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

சு. „ க. கோவிந்தராசன், பி. ஏ. (ஆனர்சு), பி. டி. தமிழ்ப் பேராசிரியர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி. சைதாப்பேட்டை, சென்னை.

எ. „ சித்தாந்த பண்டிதர், ப. இராமநாதபிள்ளை அவர்கள், கழகப் புலமையாளர்.

அ. „ பண்டித வித்துவான், தி. சங்குப்புலவர் அவர்கள், கழகப் புலமையாளர்.

# உள்ளுறை


அகமுருக வணங்கிடுவோம்
—வெண்பாவூர், திரு. பொ. திருஞானம் ௩௩௮

அட கடவுளே !—திரு. கு. பரமசிவன், எம். ஏ. ௨௪௨

அப்பரடிகள் அருட்பணிக் கழக விழாக்கள்
—வித்துவான். திரு. அ. க. நவநீதகிருட்டிணன் ௪௭௩

அப்பர் திருநாள் ௩௬௩

அலர் பெரிதே தோழி !—தமிழண்பன் ௩௧௮

அறிவுப் படை—திரு. ஆசிரியர். மு. பெ. சுளபதி ௩௫௧

அறிவைப் பெறு !—காஞ்சில், திரு. கா. கணபதி ௪௮௨

அன்பே நிலைக்கும்— „ „ ௫௬௧

ஆக்காஷ்வாணி மறியல் ௪௫௫

ஆயிரம் பிறைஆர் அருந்திறல் நாவலர்
சோமசுந்தர பாரதியார்—ஆசிரியர் ௫௩௭

“இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே”
—திரு. புலவர் அரசு ௧௬௩

இந்தியப் பெருநிலச் செய்தித்தாள்களின்
வரலாறுகள்—ஆசிரியர் ௨௯௭

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நூல்நிலையத்
தொண்டு—டாக்டர் பத்மஸ்ரீ எஸ். ஆர்.
அரங்கநாதன் ௧0, ௭௩, ௧௨௩

இந்தியும் பிற மாநில மொழிகளும் ௧௧௪

இரண்டாவது சிற்றிலக்கிய மாநாடு ௩௫௫, ௪0௩

இரண்டாவது சிற்றிலக்கிய மாநாட்டு வாழ்த்துக்கள் ௪0௬

இராமலிங்க அடிகள் வரலாற்றுக் காலக்குறிப்புகள்
—திரு. நா. இரா. வீரன், சமயபுரம் ௨௬0

இலக்கியத் தொடர்பு
—வித்துவான் நெல்லை க. சுப்பிரமணியம் ௩௫௩

இன்றியமையா வேண்டுகோள் ௫௩௨

உலகெலாம் வாழுந் தமிழருக்கு ஒரு வேண்டுகோள்
—திரு. கா. பொ. இரத்தினம், தமிழ்மறைக்கழகத்
தலைவர், இலங்கை ௩௮௬

எங்கள் நூல்—வித்துவான், வ. சு. வேங்கடேசன் ௪0௫

“எதிர்மறை இடைநிலை”—வித்துவான்,
திரு. வி. பொ. பழனிவேலன் பி. ஒ. எல். ௨௧௫

எது படை ?—திரு. மு. பெ. நளபதி ௪0௨
எழுந்திடடா என் தோழா !
—தமிழாக்கம்: திரு. கு. பரமசிவன், எம்.ஏ. ௫0௪
ஏழிசைகளும் சுரங்களும்
—சங்கீதபூஷணம் திரு. எஸ். இராமநாதன் ௧அ௫
ஏனெலிப்போம்—ஆ. துரைக்கண்ணு ௫அ0
ஐயமற்ற அருள்—நாஞ்சில் திரு. கா. கணபதி . ௧௬அ
"கசாரணியத் திராவிடக் கவிமணி"
மறைத்திரு. வே. முத்துசாமி ஐயர், எம்.ஏ.எல்.டி.. ௫௧௪
கலிங்கத்துப் பரணியில் ஓவியம்
—திரு. தி. நா. அறிவு ஒளி ௪௨௫
கல்லூரிகளில் கன்னல் தமிழ் !
—கா. வேழவேந்தன், கு. தண்டாயுதம் ௫௬௨
கல்வெட்டுக்களினால் அறியப்படும் இரு நாடக நூல்கள்
—வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார் ௪௭௯
களிறும் குளிறும்—வித்துவான், ஆ. சிவலிங்கனார், மயிலம் ௫௬௩
காப்பது தமிழ் !—நாஞ்சில், திரு. கா. கணபதி ௩அ௫
கார்த்திகை விழா—திரு. சாமி செல்வவிநாயகன் ௧௬௯
கிறிஸ்துமஸ்—திரு. இராசையா ௧௬௧
குடமுழுக்கு விழா ௪௫௪
குறளுக்குப் பாமாலை—திரு. புலவர் செந்துறை முத்து ௨௨௯
குறளும் சிலம்பும்—திரு. ச. அகத்தியலிங்கம், M A B.Sc. ௨௭௫
குறுநகைத் தோழி ! குற்றாலம் சென்றேன்
—செல்வி. எஸ். ஜமலாதேவி, நாகர்கோவில் ௪௬௯
கையறுநிலை ௧௯௯
சாவகத் தீவில் இந்து சமயம்—கோவைகிழார்,
—C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.,
F. R. G. S. ௪௫௭, ௫0௫
சிலப்பதிகாரம்—வெண்பாவூர், பொ. திருஞானம் ௫௪அ
சில வியத்தகு நிகழ்ச்சிகள் ! ௨0அ
சிவனடி நீழல் சேர்ந்த சிவத்திரு
வாலையானந்த அடிகள் ௧௬௨
சீட்டுக் கவியின் சிறப்பு (செவிவழிவந்த செய்தி)
—பண்டித வித்துவான், திரு. தி. சங்குப்புலவர் ௩௧௯
செந்நெறி பரப்பற்காம் சீர்மை—ஆசிரியர் ௪௪௧

செய்திகளும் குறிப்புக்களும்—௫௪, ௧௦௧, ௧௪௯, ௧௯௭, ௨௪௫,
௨௯௧, ௩௪௧, ௩௮௯, ௩௪௭,
௪௮௯, ௫௩௩, ௫௮௨

சென்னை அரசாங்கத் தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சிக்குழு
—ஆசிரியர் ௨௪௯

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் ௫௩௪

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாச மாநாடு ௨௦௯

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்
ஆசிரியர் கல்லூரிக் கலைச்சொற்கள் பரிசளிப்பும்,
நூல் வெளியீடும் ௨௮௧

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் பரிசளிப்பு
விழாத் தலைமையுரை—ஆளுநர் திரு. விட்ணுராம்
மேதியவர்கள் ௯௦௭

சேரன் செங்குட்டுவன்—வித்துவான், சொ. சிங்கார
வேலனார், தருமபுரம் ௩௨௯, ௩௯௯

சை. சி. நூற்பதிப்புக் கழகத் தலைவர் உயர்திரு.
பாகனேரி, வெ. பெரி. பழ. மு. காசிவிசுவ
நாதன் செட்டியாரவர்களின் மணி
விழா வாழ்த்துக்கள் ௧௧௫, ௧௨௧

சொல் ஓவியம்—செல்வி. எஸ். ஜமலாதேவி,
நாகர்கோவில் ௩௩௪

டாக்டர், ஆர். பி. சேதுப்பிள்ளை யவர்களின்
பெருங்கொடைக் காணிக்கை ௩௦௯

டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவுமலர் ௫௨௯

டாக்டர் தருமாம்பாள் அம்மையார் மறைவு ௪௪௮

தமிழகப் புலவர் குழு ௨௦௭, ௨௫௭

தமிழர் செல்வம்—வித்துவான், திரு. பெ. கோவிந்தனார் ௧௪௭

தமிழர் வீரம்—வித்துவான் திரு. பெ. கோவிந்தனார் ௧௦௦

தமிழினத்தின் இரு திருநாள்கள்—பண்டிதர்,
கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல்., ௨௮௯

தமிழும் வடமொழியும்—புலவர், திரு. பழனிவேலன்,
பி. ஓ. எல். ௩௧௩

தமிழைக் கற்பீர்—நாஞ்சில், திரு. கா. கணபதி ௪௧௫

தமிழ்த் தாய்த் திருப்பள்ளி யெழுச்சி
—வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம் ௫௧௮

தமிழ்த் திருநாள்—சித்தாந்த சைவப் புலவர், இராவ்சாகிப்,
டாக்டர், தி. இரா. அண்ணாமலைப் பிள்ளையவர்கள் ௫௨௯

தமிழ்நாடு உறுவோம்—நாஞ்சில், திரு. கா. கணபதி ௫0௩
தமிழ்ப்பெரும் புலவர்களின் கடிதங்கள் ௭0
தமிழ்மொழிச் சிறப்பு—புலவர், திரு. வை. முரு.
முத்துக்குமாரசாமி ௫௨௭
தமிழ்மொழியின் தனிச்சிறப்பு
—திரு. கா. அப்பாத்துரை யவர்கள் எம்.ஏ, எல்.டி. ௩௮௭
தமிழ் விருத்தம்—வித்துவான், நெல்லை,
க. சுப்பிரமணியம் ௫௬௬
தனிமாண்புபடைத்த சண்முகனார் மறைவு
—ஆசிரியர் ௫௪௭
திதியனின் காதலி—வித்துவான். திரு. சொ.
சிங்காரவேலனார், தருமபுரம் ௨௩௩, ௨௬௫
திருக்குறள் பற்றிய சோவியத் மதிப்பீடு
தமிழாக்கம்: திரு. கா. அப்பாத்துரை
அவர்கள் எம். ஏ., எல். டி. ௩0௪
திருநெல்வேலித் தென்னிந்திய தமிழ்ச் சங்கம்
தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு ௧௮௪
திருநெல்வேலியில் ௧௧-ஆவது தமிழ்த் திருநாள் ௪0௧
திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை அவர்களின்
வெள்ளி விழா ௩௫௯
திருப்புத்தூர் திருமுறை மாநாடு ௪௮௫
திருமணம்—ஆசிரியர் ௪௮௯
திருவருள் மாண்பு ௨௧௩
திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்
வெளியீட்டு விழா ௫௧
திருவள்ளுவர் சமணரா?—திரு. A. பாலசுந்தர
குருக்கள் ௪௩௨, ௪௬௫, ௫௧௧, ௫௪௯
தென்காசித் திருவேந்தன்—இரா. இளையநம்பி ௪௯௯, ௫௫௩
தென்னிந்திய தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி,
தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வு ௪௧௬
தேவந்தி—வித்துவான், ஆ. சிவலிங்கனார், மயிலம் ௯௫
தேனீ—வித்துவான், பெ. கோவிந்தனார் ௧௬௭
தொன்மைத் தமிழிசையின் நன்மை—ஆசிரியர் ௨0௧
நடைப் பிணம்—ஆங்கில மூலம்: சர். வால்டர் ஸ்காட்.
தமிழாக்கம்: திரு. கு. பரமசிவன் எம். ஏ. ௫௮௧
நல்லன நாடு—நாஞ்சில், திரு. கா. கணபதி ௨௨௩

நாகரிகம்—வித்துவான், திரு. ச. சவரிமுத்து, சென்னை ௩௭௭
நாவறி விளக்கம் ௪௫௪
நூலாசிரியர்களுக்குப் பரிசு ௨௫௫
பதிஞக்கப் பண்பொப்பு—சித்தாந்த பண்டிதர்,
திரு. ப. இராமநாதபிள்ளை ௨௦௯, ௨௬௧, ௩௧௧, ௩௫௬, ௪௧௯, ௪௪௯
பாரதியின் கவிதை நடை—திரு. வை. சச்சிதானந்த மூர்த்தி, பி. ஏ. (ஆனர்சு) ௮௯
பாலையுள் கடவுட் கொள்கை—திரு. சி. தாமோதரம் ௧௧௬
பால் பொங்குக !—திரு. புலவர் அரசு ௨௧௪
பிள்ளை இலாப் பெருந்துயரம்—கவிஞர் மருதூர் இளங்கண்ணன், பி. ஓ. எல். ௩௬௮
புடவை—வித்துவான், திரு. பெ. கோவிந்தனார் ௨௮௦
புதினப் படிப்பு—நெல்லை திரு. க. சுப்பிரமணியன் ௧௮௩
புத்தக வெளியீடுகள் பற்றிய புள்ளி விவரம் ௩௧௦
பெயர் சொல்லாப் பெரும்புலவர்
—வித்துவான், திரு. பாப்பு இராமநாதன் ௪௫௧
பெருஞ்சொல் விளக்கனார், சிவத்திரு. அ. மு. சரவண முதலியாரவர்களின் மாண்பு—ஆசிரியர் ௩௪௫
பேராசிரியர் செ. ச. போசு அவர்களின் நூற்றுவது பிறந்தநாள் விழா—ஆசிரியர் ௧௫௩
பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கட்குப் பாராட்டு ௨௪௩
மகாவித்துவான் மறைத் திரு. சி. கணேசையரவர்கள்—பண்டித வித்துவான், திரு. க. கி. நடராசன், B.O.L., Dip-in-Ed. ௩௨௩, ௩௬௧, ௪௦௯
மணிவிழாக்கொள் மாண்புசேர் பாகனேரித் தமிழ்ப் புரவலர் திருவாளர் வெ. பெரி பழ. மு. காசி விசுவநாதன் செட்டியாரவர்களின் வரலாற்றுக் குறிப்பு ௫௭
மணிவிழாச் செல்வர்........சிவத்திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் வாழ்க்கை வரலாறு ௨௫௧
மணிவிழா வனப்பமை தலைவர் ராய சொக்கலிங்கனார் ௧௦௫
மதிப்புரை—௫௬, ௧௦௪, ௧௫௧, ௨௦௦, ௨௪௭, ௨௯௫, ௩௪௩, ௩௯௧, ௪௩௯, ௪௮௮, ௫௩௫
மலாடர் கோமான்—இரா. இளையநம்பி ௧௭௫

மறைமலையடிகள் ஆராய்ச்சித்திறன்
—திரு. தமிழன்பன் ருஉக
மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழா
—ஆசிரியர் க
மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழா
வாழ்த்துப் பாக்கள் ௫உ
மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்புவிழா
வாழ்த்துரைகள் ௪0
மாடம்பாக்கம் சிவனை வழுத்திய திருப்பாடல்கள்
—மறைமலையடிகளார் எஉ
மாடல மறையோன்
—திரு. மது. ச. விமலானந்தம், எம். ஏ. ருசுகூ
முத்தானந்த அடிகள் இறையடி நிறைவி லொடுங்கல் ககஉ
முல்லைப்பண் ஆராய்ச்சி—இராவ்சாகேப்,
திரு. கு. கோதண்டபாணி பிள்ளை அ௫, க௫எ
யானை—வித்துவான், திரு. பெ. கோவிந்தனார் உ௫உ
வசந்தமாலை
—வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார் மயிலம் உஉ௪
வாய்மை கண்டு தெளிவாயே !
—நாஞ்சில், திரு. கா. கணபதி க௪கூ
வேலன்—திரு. பி. எல். சாமி, பி.எஸ்ஸி, உகசு
வையகத்தில் மனிதன் இருப்பிடம்—வித்துவான்,
மாவை துரை. பழநிமகாதேவன், ஆம்பூர் ௪௫ரு, ௪அ௫
வைர விழா (சதமுழுக்கு) கக0
Statement about ownership and other particulars about
the journal—Senthamil Selvi ௫௫கூ

நூல் நிலையத்தைத் திறந்துவைத்து அமைச்சர் உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் பேசுதல்.

நூல்நிலையப் பார்வையாளர் ஏட்டில் சென்னை மாநில ஆளுநர் தம் கருத்தை எழுதுதலும், அமைச்சர் வருகையாளர் பதிவேட்டில் கையெழுத்திடுதலும்

நூல்நிலைய முன்கூடத்தில் அம்பலவாணர் திருவுருவத்தின் முன் மாண்பமை ஆளுநர், டாக்டர் அரங்கநாதனார், அமைச்சர், செயலாளர்.

பாகனேரி, தமிழ்ப் புரவலர், திருவாளர் மு. காசிவிசுவ நாதன் செட்டியாரும் அவர்தம் மனைவியார் திருவாட்டி இலக்குமி ஆச்சியாரும். ௫௭

பெருஞ்சொல் விளக்கனார், சிவத்திரு. அ. மு சரவண முதலியாரவர்கள். ௩௪௫

பேராசிரியர், செகதீசு சந்திரபோசு ௧௫௪

பேராசிரியர், ம. கி. சண்முகனார் ௫௪௭

மணிவிழாச் செல்வர், சிவத்திரு வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்களும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் திருவாட்டி சுப்புலட்சுமி அம்மையாரும். ௨௫௧

மாண்பமை ஆளுநர் விட்ணுராம் மேதி அவர்கள் தலைமை யுரை நிகழ்த்துதல். ௧

முன்னாள் மேயர் டி. செங்கல்வராயன் அடிகளைப் பாராட்டிப் பேசுதல். ௧

ராவ்சாகிப் கு. கோதண்டபாணிப் பிள்ளை சொற்பொழி வாற்றுதல். ௧

வைரவிழாக் கொண்ட குடந்தை சைவத் திருவாளர் பு. து. இரத்தினசாமிப் பிள்ளையவர்களும் அவர்தம் துணைவியார் கலியாணத்தம்மாளும். ௧௧௦

# செந்தமிழ்ச் செல்வி



# 'செந்தமிழ்ச் செல்வி'

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்


க திரு. செந்தமிழ்க் காவலர், டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், எம்.ஏ., பி.எச்.டி.

உ. ,, 'சித்தாந்த கலாநிதி' வித்துவான், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

ங. ,, பேராசிரியர், மு. இராசாக்கண்ணனார் அவர்கள், பி.ஓ.எல். (ஆனர்சு) எம்.இ.எஸ்., இந்தியமொழித் துறைத் தலைவர், மலேயாப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

ச. ,, செந்தமிழ்க் கலைமணி, வித்துவான், பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள், பி.ஏ. (ஆனர்சு) (லண்டன்) எம்.ஏ., பி.ஓ.எல். (சென்னை) ஆராய்ச்சித்துறைத்தலைவர், அரசகரும மொழித்துறை, கொழும்பு.

ரு. ,, கு. பரமசிவம் அவர்கள், எம். ஏ. தமிழ் விரிவுரையாளர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

சா. ,, க. கோவிந்தராசன் அவர்கள், பி. ஏ. (ஆனர்சு), பி. டி., தமிழ்ப் பேராசிரியர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை.

எ. ,, சித்தாந்த பண்டிதர், ப. இராமநாதப் பிள்ளை அவர்கள், கழகப்புலமையாளர்.

,, பண்டித, வித்துவான், தி. சங்குப் புலவர் அவர்கள். கழகப்புலமையாளர்.


---

## உள்ளுறை


| | |
|---|---|
| மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழா | க |
| நூல்நிலையத் திறப்பு விழா வாழ்த்துப் பாக்கள் | ௩உ |
| வாழ்த்துரைகள் | ச0 |
| திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா | ருக |
| செய்திகளும் குறிப்புக்களும் | ருச |
| மதிப்புரை | ருசா |

# படங்கள்


அப்பர் அடிகள். ௫௯௫

அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் மறைமலையடிகளார் நூல்நிலையத்தைத் திறந்து வைத்தல். அ

அறிஞர் சி. என். அண்ணாத்துரை சொற்பொழிவாற்றுதல். ௧

ஆளுநர் அவர்களைக் கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் வழியனுப்புவித்தல். ௧

இரண்டாவது சிற்றிலக்கிய மாநாடு: மாநாட்டுத் தலைவர், சொற்பொழிவாளர், செயலாளர் ஆகியோர் ௪௪௧

"சுசாரணியத் திராவிடக் கவிமணி" மறைத்திரு. வே. முத்துசாமி ஐயர், எம்.ஏ., எல்.டி. ௫௧௫

காரைக்குடி தமிழறிஞர், உயர்திரு. இராய சொக்கலிங்கனார் அவர்கள். ௧௦௫

காலை நிகழ்ச்சிக்கு வந்திருந்த பெருமக்களுள் ஒரு பகுதியார். ௧

சங்கச் செயலாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல். ௧

சங்கீதவாணி, எம். எல். வசந்தகுமாரி இறை வணக்கம் பாடுதல். ௧

சுவாமி முத்தானந்தர். ௧௧௨

சென்னை மாநில ஆளுநர் மாண்பமை விட்ணுராம் மேதியவர்களைச் செயலாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் வரவேற்று மாலையிடல். ௧

செல்வி கலையரசி. ௨௯௪

டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் ௪௪௮

தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசுபெற்ற நூலாசிரியர்கள்.
(1) திரு. அழ. வள்ளியப்பா, (2) திரு. மயிலை சீனி வேங்கடசாமி, (3) திருவாட்டி 'அநுத்தமா' ௨௪௯

திரு. பி. சொ. சண்முகம் பிள்ளையவர்கள் வெள்ளிவிழா நிகழ்ச்சி. ௫௯௦

திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியீட்டு விழாவில் ஆளுநர் விட்ணுராம் மேதி, அமைச்சர் பக்தவத்சலம், அறநிலையப் பாதுகாப்பாளர் திரு உத்தண்டராமன், மணலி இராமகிருட்டிண முதலியார் ஆகியோர். ௧

திருவாசக மொழிபெயர்ப்பாளர் திரு. K. M. சுப்பிரமணியம் சொற்பொழிவாற்றல். ௧

# பிறவெளியீட்டாளரின் வெளியீடுகள்

## இலக்கியம்

| | |
|---|---|
| திருவள்ளுவர்—நாவலர், சோமசுந்தர பாரதியார் | 4 50 |
| தமிழர் நாகரிகமும் பண்பாடும்—மா. இராசமாணிக்கனார் | 1 25 |
| இலக்கியத் திறன்—டாக்டர், மு. வரதராசனார் | 4 50 |
| தொல்காப்பியத் தமிழர்—புலவர் குழந்தை | 5 00 |
| யாப்பதிகாரம் (இலக்கணம்) „ | 3 00 |

## வரலாறு

| | |
|---|---|
| தென்னிந்திய குலங்களும் குடிகளும்<br>—ந. சி. கந்தையாப் பிள்ளை | 1 50 |
| இராசராசேச்சுரமும் பிற சோழர் கோயில்களும்<br>—ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல். | 2 00 |

## சமயம்

| | |
|---|---|
| சைவசமய வளர்ச்சி—டாக்டர், மா. இராசமாணிக்கனார் | 5 00 |
| சைவசமய வரலாறு—ந. சி. கந்தையாப் பிள்ளை | 1 50 |

## பல்வகை

| | |
|---|---|
| அணைகடந்த வெள்ளம்—கு. ராஜவேலு | 2 00 |
| தங்கச் சுரங்கம் „ | 4 50 |
| கல்வி—டாக்டர், மு. வரதராசனார் | 4 00 |
| பாபுவின் கனவு—நா. கி. நாகராசன் | 1 50 |
| நகைச்சுவை விருந்து—வித்துவான், மாவண்ணாதேவராசன் | 1 25 |
| தணலில் தங்கம்—மா. கி. தசரதன், எம்.ஏ. | 1 50 |
| கிழக்கு வெளுத்தது—வை. மு. கோ. | 5 00 |
| மிஸ் அருந்ததி—சியாமா | 2 00 |
| ஞானசிகரம்—பி. ஸ்ரீ | 2 00 |
| மண்மறைந்த கதைகள்—டாக்டர், ருக்மணி கிருஷ்ணசாமி | 1 15 |
| இன்ப உலகம்—சங்கராராம் | 5 00 |
| கோதை காதல் வெள்ளம்—பி. ஸ்ரீ. ஆச்சாரியா | 2 50 |
| உதிரிப் பூ—கெ. அ. சுந்தரவடிவேலு, எம்.ஏ., எல்.டி. | 1 50 |
| ஸ்ரீமத் கம்பராமாயணம் (ஆரணிய காண்டம்)<br>—டாக்டர், உ. வே. சாமிநாதய்யர் | 12 00 |
| புதிய தமிழகம்—மா. இராசமாணிக்கனார் | 1 00 |
| இல்லறம்—வில்லியம் தர்ஸ்டன் | 1 00 |
| சிவம் (6 நாடகங்கள்)—சுர்மா வேணுகோபாலசாமி | 1 65 |
| நல்லெண்ணம்—மௌலவி. எஸ். அப்துல் வஹாப் | 2 00 |
| குமரியும் காசியும்—மு. அருணாசலம் | 2 00 |
| உதயம்—கலைவாணன் | 2 50 |

# மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழா



அமைச்சர் உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்கள் நூல்நிலையத்தைத் திறந்துவைத்தல்

மறைமலையடிகள் நூல்நிலையம் சென்னை-1
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
16 SEP 1958



சென்னை மாநில ஆளுநர் மாண்பமை விட்ணுராம் மேதி அவர்கள் விழாப் பந்தலுக்கு வரும்போது செயலாளர் வ. சுப்பையா பிள்ளை வரவேற்று மாலையிடல்

சங்கீதவாணி எம். எல். வசந்தகுமாரி இறைவணக்கம் பாடுதல்

சங்கச் செயலாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை
வரவேற்புரை நிகழ்த்துதல்



காலை நிகழ்ச்சிக்கு வந்திருந்த பெருமக்களுள் ஒரு பகுதியார்



மாண்பமை ஆளுநர் விட்ணுராம் மேதி அவர்கள்
தலைமையுரை நிகழ்த்துதல்

நூல்நிலையத்தைத் திறந்துவைத்து
அமைச்சர் உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்கள் பேசுதல்



நூல்நிலையக் கட்டட முன்கூடத்தில் அமைந்துள்ள அம்பலவாணர் திருவுருவத்தின்முன் மாண்பமை ஆளுநர், டாக்டர் அரங்கநாதனார், அமைச்சர், செயலாளர்



நூல்நிலையக் கட்டட மாடியில்
சென்னை மாநில ஆளுநர் பார்வையாளர் ஏட்டில் தம் கருத்தை எழுதுதலும்
அமைச்சர் வருகையாளர் பதிவேட்டில் கையெழுத்திடுதலும்



ஆளுநர் அவர்களைக் கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் வழியனுப்புவித்தல்
(நூல்நிலையக் கட்டடம், விழாப்பந்தல், மல்லிகேசுரர் திருக்கோவில்
இவைகளின் தோற்றம்)



அறிஞர் சி. என். அண்ணாத்துரை சொற்பொழிவாற்றுதல்



முன்னாள் மேயர் டி. செங்கல்வராயன் அடிகளைப் பாராட்டிப் பேசுதல்



ராவ்சாகிப் கு. கோதண்டபாணிப் பிள்ளை சொற்பொழிவாற்றுதல்

# திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியீட்டு விழா



தலைவர் சென்னை மாநில ஆளுநர் மாண்புமை விட்ணுராம் மேதி,
உள்நாட்டமைச்சர் பக்தவத்சலம், அறநிலையப் பாதுகாப்பாளர்,
உத்தண்டராமன், மணலி இராமகிருட்டிண முதலியார் முதலியோர்




மொழிபெயர்ப்பாளர் K. M. பாலசுப்பிரமணியம் சொற்பொழிவாற்றல்

| சிலம்பு | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௯, ஆவணி | பரல் |
|---|---|---|
| ௩௩ | செப்டம்பர், 1958 | ௧ |

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின்
ஆதரவில் நடைபெற்ற

# மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்புவிழா

இவ்விழா 958 ஆகஸ்ட் 24-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் சென்னை, இலிங்கிச்செட்டித் தெரு, 105 எண்ணுள்ள கண்கவர் வனப்பினதாகிய வளமனையின் முன்னர்ச் சிறப்புற அமைக்கப்பட்ட அழகுமிக்க பெரிய பந்தர்க்கண் தொடங்கப் பெற்றது.

**பந்தற் சிறப்பு**

வளமனையினைச் சார்ந்து வடகீழ்பால் மூத்த பிள்ளையார் திருக்கோவில். இதன் வடபால் மல்லிகேசுரர் திருக்கோவில். திருக்கோவில் தொட்டு வளமனையின் தென்பால் எல்லைகடந்து அகன்ற நெடுந்தரு முற்றும் பரந்த பெரு நிலைப்பந்தல். பந்தல் மேற்கட்டியின் மேன்மையாலும் வாழை மாவிலை, பூவேலை யமைந்த கொடி வகைகள், தோரணங்கள், பூமாலைகள், பல்வகை மின் விளக்குகள் இவற்றாலும், அழகிய இருக்கைகளாலும் கவினெய்தி மிக்க அழகுடன் பொலிந்து திகழ்ந்தது.

மூத்தபிள்ளையாரின் திருக்கோவிலை யொட்டிக் கிழக்கு முகமாக அழகிய மேடை அமைக்கப் பெற்றுள்ளது. மேடை அழகிய விரிப்புக்களாலும், எழுத்துப் பீடமாகிய மேசையி னாலும், அம் மேசையின் விரிப்பினாலும், சிறந்த அழகிய பொன் பொலி இருக்கைகளாலும், பேச்சுக் கருவிகளாலும் பெரிதும்

அணிபெற்றுப் பொலிந்தது. பலவகை வாழ்த்தியங்கள் முழங்கின. ஊர்காவற்றுறையினரும், தொண்டர்குழுவினரும் நிரல்பட ஆங்காங்கே சீர்பெற நின்று சிறப்பித்தனர்.

**வரவேற்பு**

குறித்த நேரத்திற் சென்னை மாநில ஆளுநர்தம் நல்வரவினை எல்லாரும் உளங்கலந்த அன்பினுடன் வசமுற நகைமுகத்துடன் எதிர்நோக்கிய வண்ணம் நின்றனர். ஆளுநர் தம் அழகிய நிலப்பொறியூர்தியும் வந்தது. வருதலும் கழகத் தலைவர், ஆட்சித் தலைவர், இயக்குநர்குழு முதலியோர் புடைசூழ ஆளுநராகிய விழாத் தலைவரைக் கழக ஆட்சித் தலைவர் திரு. வ. சு. அவர்கள் பொன்னரி மாலைசூட்டி நன்முறையில் வரவேற்றனர். அதுபோல் சென்னை உள்நாட்டமைச்சர் அவர்களையும் பொன்னரிமாலை சூட்டி வரவேற்றனர். வாழ்த்தியங்கள் முழங்கின.

அனைவர்களும் மேடையின்மீது பீடுற அமர்ந்தனர். நடுவணதாகச் சென்னை மாநில ஆளுநர் மாண்பமை விட்டுணுராம் மேதி அவர்கள் தலைவராக வீற்றிருந்தனர். அவர் தம் வலப்பால் சென்னை உள்நாட்டமைச்சர் உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் அமர்ந்திருந்தனர். அதுபோல் இடப்பால் நூல்நிலைய நுண்கலைப் பேராசிரியர் பத்மஸ்ரீ எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள் அமர்ந்திருந்தனர்.

பேரவைக்கண் பெருமிதத்துடன் அமர்ந்த பெருமக்களுட் சிலர் திருப்பெயர் வருமாறு :

சென்னைச் சட்டமன்றத் தலைவர் டாக்டர் யு. கிருஷ்ணாராவ்; நகரவைத் துணை ஆணையர் என். சங்கரன்; சரசுவதி பாண்டுரங்கம், எம். எல். சி; உயர்நீதி மன்ற நடுவர் கணபதியாபிள்ளை; நகரவை முன்னாள் ஆணையர் வி. என். சுப்பராய முதலியார்; தியாகராய கல்லூரி முதல்வர், எம். கே. சண்முகம்; அட்வகேட் வி. இராச கோபால முதலியார்; நகரமைப்பு அதிகாரி தி. வை. சபாபதி; சொ. அமிர்தகணேச முதலியார்; இராவ்சாகேப் து. கோதண்டபாணிப்பிள்ளை; ஆசிரியர் இளவழகனார்; பல்கலைக் கழக நூல்நிலையப் பேராசிரியர் சனார்த்தன நாயுடு; யூனியன் கம்பெனிப் பொறிவலர் கே. கே. விசுவநாதன், பி. இ; நெடுஞ்சாலைப் பொறிவலர் பா. நமசிவாயம், பி. இ முதலியோராவர்.

பேரவையின் பெருமக்கள் கூட்டம் பந்தல் முற்றும் நிறைந்து பந்தலின் இருபுறங்களிலும் நெடுந்தொலைவரைப் பெருவெள்ளமாக நின்றது. பெண்பாலார் கூட்டமும் பெருகியிருந்தது. அமைதியும் இருந்தது.

**துவக்கம்**

கடவுள் வாழ்த்துடன் விழாத் துவங்கப்பெற்றது. கடவுள் வாழ்த்து இசைச் செல்வி, எம். எல். வசந்தகுமாரியால் "அருள்புரிவாய் கருணைக் கடலே" என்னும் செந்தமிழ்ப்பாப் பாங்கமை பண்ணுடன் ஒங்குமென் குரலில் தேங்கும் அமிழ் தெனப் பாடப் பெற்றது. அவையினரனைவரும் எழுந்து நின்று நினைவொருங்கி மகிழ்வுறக் கேட்டு இன்புற்றனர். விழாத் துவங்கப் பெற்றது. மீண்டும் விழாத் தலைவரவர்கட்கும், திறப்பாளர் பேச்சாளர்கட்கும் மணமிகு மலர்மாலை திரு. வ. சு. அவர்களால் சூட்டப்பெற்றன.

சைவசித்தாந்த சங்கச் செயலாளர்

திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் நிகழ்த்திய

## வரவேற்புரை

பெரியோர்களே! தாய்மார்களே!!

மாண்பு மிக்க சென்னை மாநில ஆளுநர் விட்ணுராம் மேதி அவர்களே வருக! வருக! உங்கள் வரவு நல்வரவாகுக. மேதி அவர்களுடைய தகுதி நோக்கியே மைய அரசினர் சென்னை மாநில ஆளுநராகத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கின்றனர். மேதி அவர்கள் அஸ்ஸாம் மாகாணத்தில் பிறந்து, கல்கத்தாவில் கல்லூரிப் படிப்பை முடித்துப் பட்டம்பெற்று அஸ்ஸாமில் கௌகதி நகரில் வழக்கறிஞராகச் சில ஆண்டுகள் தொழில் புரிந்து தமது முப்பதாம் ஆண்டளவில் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு நாலைந்துமுறை சிறைசென்று பின்னர் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1946-ஆம் ஆண்டில் வரித்துறை, நிதித்துறைகளின் அமைச்சராகவும், பின்னர் 1957-ஆம் ஆண்டு முடிய முதலமைச்சராகவும், மக்கள் மனங்கவர ஆட்சி செலுத்தி வந்தனர். இப்படிப்பட்ட பெருந்தகுதி வாய்ந்த மேதி அவர்கள் நமக்கு ஆளுநராக வந்தமை நாம்பெற்ற பெரும் பேறாகும். தமிழ்மொழியின் தொன்மை, சிறப்பு, தமிழர் நாகரிகம், தமிழ் நாட்டிலுள்ள கலைகள் இவற்றைக் கண்டு பெருமைப் படுவதோடு, இவற்றின் வளர்ச்சிக்கு மேலும் உதவிபுரிவார்களென்று நம்புகிறோம். மேதி அவர்கள் பல்லாண்டுகள் வாழ்கவென வாழ்த்துவோம்.

சென்னை உள்நாட்டு அமைச்சர் உயர்திரு. பக்தவத்சலம் அவர்களே வருக! வருக! உங்கள் வரவு நல்வரவாகுக. அமைச்சரவர்களுக்கும் ஆளுநரவர்களுக்கும் ஓர் ஒற்றுமை காணப்படுகின்றது. ஆளுநரவர்களைப்போலவே அமைச்சரவர்களும் தமது முப்பதாம் வயதில் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டுப் பின்னர் 1946 முதல் அமைச்சவையில் அமைச்சராக இருந்து நாட்டுக்கு

நற்றொண்டு புரிந்து வருகின்றனர். முதற்கண் உணவுப்பொருள் களுக்கு மூலகாரணமாயுள்ள நீர்ப்பாசனத்துறை, மின் ஆற்றல் துறைகளின் அமைச்சராக இருந்து பின்னர், மக்கள் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத பயிர்த்தொழில் அமைச்சராகி இப்போது உடற்பாதுகாவற்றுறை, உயிர்நலத் (அறநிலையம்) துறைகளின் அமைச்சராக இருந்து வருகின்றமை நமக்குப் பெருமகிழ்வினைத் தருவதாகும். முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் மறைமலையடிகள் நூல்நிலையத்தைத் திறப்பதற்கு முதற் கண் ஒத்துக்கொண்டார்கள். பின்னர் இத்திங்கள் தொடக்கத் திலே குடியரசுத் தலைவர் இங்கே வந்தமையால் தமது வெளியூர்ப் பயணத்தை மாற்றியமைக்கவேண்டியதாயிற்று என்றும், திரு. பக்தவத்சலம் அவர்களைக்கொண்டு திறப்பிக்கச் செய்யுங்களென் றும் கூறினார்கள். உடனே உயர்திரு. பக்தவத்சலம் அவர்களைக் கண்டு கேட்கவே மறுக்காமல் ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் ஒப்புக்கொண்டது எதிர்பாராது கிடைத்த பெரும்பேறென மதிக் கின்றேன். ஏனெனில் 1946-இல் எட்டையபுரத்தில் பாரதி மண்டபம் திறப்பிக்கப்பெற்ற அன்று மாலையில் திருநெல்வேலிக் கூடலில் நகராட்சிப் பூங்காவிலே எம். ஏ., எம். எல்., தாகூர் சட்ட விரிவுரையாளர் உயர்திரு கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வரலாறு பொறிக்கப்பட்ட நடுகல்லை நம் அமைச்சரவர்கள் நாட் டினார்கள். உயர்திரு. எம். எல். பிள்ளை அவர்கள் சட்டக் கல் லூரியில் நம் அமைச்சரவர்களின் ஆசிரியர் ஆவர். அஃதொரு பொருத்தமல்லவா? உயர்திரு. எம். எல். பிள்ளை அவர்கள் உருவப்படம் மாலையில் இங்கே திறந்து வைக்கப்பெறும்.

அரசியல் தலைவராய்ப் புகழ்பெற்று விளங்கியவரும், நம் அமைச்சரவர்களின் மாமனருமாகிய உயர்திரு. சி. என். முத்து ரங்க முதலியாரவர்கள் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் மறைமலையடிகளாரின் மாணவர் ஆவர். மறைமலையடிகளாரின் நூல்நிலையத்தைத் திரு. பக்தவத்சலம் அவர்கள் திறந்துவைக் கும்படி ஏற்பட்டது மிக்க பொருத்தமாகக் காணப்படுகின்ற தல்லவா? திரு. அமைச்சரவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துவோம்.

இனி, நூல்நிலைய நுண்கலையில் உலகப்புகழ்பெற்ற பெரும் பேராசிரியர் பத்மஸ்ரீ எஸ். ஆர். அரங்கநாதன் அவர்களே வருக! வருக! உங்கள் வரவு எங்களுக்கு மிக்க பெருமை தருகின்றது. நூல்நிலைய நுண்கலையைப் பற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட நூல் களும், ஆயிரத்துக்கு மேற்பட்ட கட்டுரைகளும் தாங்கள் எழுதி வெளியிட்டமையை நினைத்து நினைத்து இறும்பூதெய்துகின் றேம். சென்னை மாநிலக் கலைக்கல்லூரியில் கணிதப்பேராசிரிய

ராக இருந்து பின்னர் 1924 முதல் 1944 வரை சென்னைப் பல்கலைக் கழக நூல்நிலையத் தலைவராகப் பணியாற்றி அதன்பின் காசிப் பல்கலைக் கழக நூல்நிலையத் தலைவராயும், டில்லி நூல் நிலையத் தலைவராயும் அமர்ந்து பணிபுரிந்து இப்போது பல்கலைக் கழகப்பொருட்கொடை நிலையத்தின் (University Grants Commission) நூல்நிலையக் குழுத் தலைவராயிருக்கின்றமை எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி தருகின்றது.

சென்னைமாநில ஆளுநர் தலைமையில் உள்நாட்டமைச்சர் திறந்துவைக்கும் மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழா வின்போது சொற்பொழிவாற்றுவதற்குப் பெருந்தகுதியுடைய வர் நூல்நிலையப் பேராசிரியராகிய டாக்டர். அரங்கநாதன் அவர் களே ஆவர் எனக்கருதி அவர்கள் பெங்களூரில் தங்கியிருக்கி றார்கள் எனக்கேள்வியுற்று எழுதிக்கேட்டேன். அவர்கள் பேரன் புடன் இசைவு தெரிவித்து எந்தப் பொருள்பற்றிப் பேசவேண்டு மென்று உசாவினார்கள். ‘நூல்நிலையத் தொண்டு’ என்னும் பொருள்பற்றிப் பேசவேண்டினேன். அதனை முன்னதாக எழுதி அனுப்புமாறு கேட்டபடி அவர்களும் இசைந்து எழுதி அனுப்பியுள்ளார்கள். அஃது அச்சிடப்பட்டு வெளிவந்திருக் கின்றது. அவர்கள் இருமுறை நூல்நிலையக் கட்டடத்திற்கு வந்து நூல்நிலையத்திற்கேற்றவாறு இக்கட்டடத்தைச் சீர்திருத்தி அமைப்பதற்கேற்ற சிறந்த கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இந் நூல்நிலையம் பல்லாற்றானும் சிறந்து விளங்குவதற்குத் தம்மா லான உதவிகளை எப்போதும் செய்வதாக உறுதி கூறியுள்ளார் கள். இவர்களுடைய தியாகத்தைப்பற்றி ஒன்று தெரிவிப்பது முதன்மையாகின்றது. சென்ற ஆண்டில் நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவின்போது ஒரு நூறாயிரம் வெண்பொற் காசுகளை நூல்நிலையப் பட்டப்படிப்பின் பொருட்டு நன்கொடை அளித்துள்ளார்கள். அது மிகமிகப் போற்றுதற் குரிய அரிய செயலாகும். தாம் குடியிருக்கும் திருவல்லிக்கேணி யிலுள்ள பழைய வீட்டிலேயே எளிய வாழ்வை நடத்திக்கொண்டு தாம் ஈட்டிய பொருளில் பெரும்பகுதியை நன்கொடையாக வழங்கியதை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் எல்லையற்ற மகிழ்ச்சி பெருகுகின்றது. நூல்நிலையப் பேராசிரியரே வாழ்க! வாழ்க! வென வாழ்த்துவோம்.

இனி, மறைமலையடிகள் நூல்நிலையம் இங்கே அமைக்கப் பெறுவதுபற்றிச் சில சொல்ல விரும்புகின்றேன். மறைமலை யடிகளார் நாகப்பட்டினத்திலே பிறந்து கல்விபயின்று 1898-ஆம் ஆண்டில் சென்னைக்குப் போந்து கிறித்தவக் கல்லூரியில் 1911-வரை தமிழாசிரியராக இருந்து பின்னர் பல்லாவரம் சென்று

தங்கி நூல் எழுதுவதிலும், நூல் ஆராய்வதிலும் ஈடுபட்டார்கள். தமது ஆராய்ச்சிக்கெனத் தமிழ் ஆங்கிலம் ஆரியம் என்ற மும்மொழிகளிலும் நாலாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களை வாங்கித் தொகுத்து வைத்திருக்கின்றனர். அவர்கள் வாங்கிய நூல்களில் படிக்காத நூல் ஒன்றும் இருக்காது. நூல்கள் அனைத்திற்கும் மேல்உறையிட்டே வைத்திருக்கின்றனர். நூல்களை உயிர்போல் போற்றிவந்தனர். 15-9-1950-இல் அடிகள் இறையடி சேர்வதற்குச் சில நாட்களுக்குமுன் கருத்து நிறைவேற்றத் தாள் (உவில்) எழுதியதில் தமது மணிமொழி நூல்நிலையத்தைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரிடம் ஒப்புவித்துத் தமது பெயரால் பொதுமக்களுக்குச் சென்னையிலேயே தகுந்த இடத்தில் அமைத்து இலவசமாக நடத்தும்படி குறிப்பிட்டுள்ளார்கள். உவில்பற்றிய அப்பீல் வழக்கு 30-4-1957-இல் செயற்குழுவினர் பக்கமாக முடிவாயிற்று. 25-4-57-இல் இந்த நூல்நிலையக் கட்டிடம் எங்கள் கழகத்திற்கு வாங்கப்பட்டது. அடிகளார் கருத்தின்படி சிறந்த இடத்திலே அமைந்துள்ள இக்கட்டிடத்தில் நூல்நிலையம் திறக்கப்பெறுவது எல்லாரும் போற்றி மகிழ்தற்குரியது. எங்கள் கழகம் தமிழ்நாட்டிலே நூல்வெளியீட்டுக்கென முதன்முதல் தோன்றிய பப்ளிக் கம்பெனியாகும். பங்கு ஒன்றுக்கு ரூ. பத்து வீதம் 5,000 பங்குகளுக்கு ரூ. 50,000-ம் இக்கழகத்துக்கு முதலீடாகும். இதுகாறும் 950 க்கு மேற்பட்ட நூல்களைப் பல துறைகளில் வெளியிட்டிருக்கின்றது. ஆண்டுதோறும் கிடைக்கும் மிச்ச லாபத்தில் பேர்பாதி அறச்செயல்களுக்காக வழங்கி வருகின்றது. தமிழ் வளர்ச்சிக்காகத் தென்னிந்திய தமிழ்ச் சங்கமும், சமய வளர்ச்சிக்காகத் தென்னிந்திய சைவசித்தாந்த சங்கமும், இக்கழகத்தின் அறநிலையங்களாகும். தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் சார்பில் இந்நூல்நிலையக் கட்டிடம் வாங்கப்பெற்று மறைமலையடிகள் நூல்நிலையம் இங்கே திறப்பிக்கப்படுகின்றது. அடிகளார் நூல்களோடு கழகம் தொகுத்துவைத்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் இங்கே காணப்பெறும். இந்தக் கட்டிடம் ரூ. 57,000க்கு வாங்கப்பெற்றுச் சீர்திருத்தவகைக்காக ரூ. 20,000க்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நூல்நிலையத்திலுள்ள நூல்கள் சாதாரண அறிவுடையவர்க்குப் பயன்படா. மொழி, வரலாறு, தத்துவம் ஆகிய மூன்று துறைகளிலும் ஆராய்ச்சி செய்ய விரும்புபவர்க்கு வேண்டிய அரிய நூல்களெல்லாம் இங்கே இடம் பெற்றிருக்கின்றன. ஆராய்ச்சி செய்ய வருபவர்களுக்கு இங்கே வசதிகள் செய்து தரப்படும். இதனை 'ஆராய்ச்சி நூல்நிலையம்' என்று கருதுதல் மிகையாகாது.

இங்கே குழுமியுள்ள அறிஞர்களும், பொதுமக்களும், தாய்மார்களும் அமைதியோடிருந்து விழாவைச்சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். சென்னைமாநில ஆளுநரவர்களே! இவ்விழாவிற்குத் தலைமை தாங்கித் தொடங்குமாறு தங்களைப் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

### நூலகத் திறப்பு விழாவில் சென்னை மாநில ஆளுநர் மாண்பமை விட்ணுராம் மேதி அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் தமிழ்ச் சுருக்கம்

அன்புடையீர்,

இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க அழைத்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினருக்கு முதற்கண் என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த நிகழ்ச்சியில் இலக்கியத் துறையிலும் நூலகத் துறையிலும் விருப்புள்ள பலர் பங்கெடுத்துள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். என்னைப் பொறுத்தவரை இங்குத் திரு. பக்தவத்சலமும், டாக்டர், அரங்கநாதனும் பொதுவாக இந்நூலகத்தைப் பற்றியும் நூலகத் தொண்டைப்பற்றியும் என்ன கூறப் போகிறார்களோ அதையே நான் கேட்பதற்கு மிகவும் விரும்புகின்றேன். டாக்டர் அரங்கநாதன் நூலகத் துறையில் தலைசிறந்தவர். அதனால் நூலகத்தைப் பற்றியும் நூலக இயக்கத்தைப் பற்றியும் அவரையே விளக்க விட்டுவிடுகிறேன். தாங்கள் அளித்த அன்புகலந்த வரவேற்பிற்கு என் நன்றி.

மறைமலையடிகள் நூல் நிலையத்தைத் திறந்து வைக்க நாம் இங்குக் கூடியுள்ளோம். சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் தமிழ்நாடு முழுவதும் அறிந்த ஒருவர். தமிழ்க் கலை, பண்பாடு, இலக்கியம், சமயம் இவற்றோடு நெருங்கிய தொடர்புடையவர். அவருடைய வாழ்க்கையிலிருந்தும் அவருடைய நூல்களில் காணப்படும் சிறந்த கருத்துக்களிலிருந்தும் புத்துணர்ச்சி ஊக்குவிப்பதற்கு இஃது ஒருநல்ல வாய்ப்பாகும்.

மறைமலையடிகள் தஞ்சை மாவட்டத்தில் 1876-இல் பிறந்தவர். அவருடைய இளமையில் பெற்றோர் செழிப்பில்லாத நிலையில் இருந்தனர். பள்ளியில் பயிலும் பொழுதே தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தகுந்த பெரும் புலவர்களிடம் பாடம் கேட்டுவந்தார். அது மொழி வளத்தைப் பெருக்கிக் கொள்ள அவருக்குப் பேருதவி செய்தது. இறுதியாக, கிறித்துவக் கல்லூரியில் அவர் விரிவுரையாளராக அமைந்தபோது தம்முடைய ஆற்றலையெல்லாம் வெளிப்படுத்த வாய்ப்பெடுத்துக்

கொண்டார். ஞானசாகரம் என்ற தமிழ்த் திங்கள் வெளியீ டொன்றை வெளியிட்டார். "சைவ சித்தாந்த மகா சமாசம்" நிறுவுவதற்கு முதற்கருவியாக அமைந்தார்.

தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி இலக் கியங்களிலும் அறிஞராக விளங்கினர். இப்பொழுது திறந்து வைக்கும் இந்நூலகத்திற்குக் காரணமாயிருப்பவர் மறைமலை யடிகளே. அவர் 1950-இல் இவ்வுலகை நீத்தபொழுது தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் தாம் சேர்த்து வைத்திருந்த ஏறக்குறைய நான்காயிரம் நூல்களையும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரிடம் கொடுத்துப் பொது நூல்நிலையம் ஒன்றை நிறுவ வேண்டினர். அவ்வாறே இக்கழகத் தினரும் தாம் சேர்த்து வைத்துள்ள ஐயாயிரத்திற்கு மேற்பட்ட நூல்களையும் இணைத்துள்ளனர். இவர்களிடம் ஆராய்ச்சி வல்லு நர்க்கு வேண்டிய பல அரிய நூல்கள் உள்ளன.

மறைமலையடிகள் ஏறக்குறைய ஐம்பது நூல்கள் இயற்றி யுள்ளார். கட்டுரைகள், மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி நூல்கள், புதினம் போன்ற பல துறைகளில் அவர் நூல்கள் இயற்றியுள் ளார். இந்நாட்டின் சமயம், பண்பாடு ஆகியவை வளர அவர் பெருந்தொண்டாற்றியுள்ளார்.

மறைமலையடிகள் தம் வாழ்க்கையில் இவ்வளவு அரிய நூல் களைத் தொகுத்து ஒழுங்காகப் போற்றிவந்த நல்ல பழக்கம் பாராட்டத் தக்கது. அவர் ஒவ்வொரு சிறு செயலையும் தவறாது செய்வார் என்பதை அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்தபோது உணர்ந்தேன். ஒரு நூலைக் குறிப்பிட்ட ஓர் இடத்தில் வைத்து அதை எடுத்துப் படித்தபின் அதை அதற் கென்று குறிப்பிட்ட இடத்திலேயே வைப்பதைப் போன்ற சிறு செயல்களில் கூட ஒழுங்கைக் கடைப்பிடித்திருக்கிறார். பொது வாக நம் வாழ்க்கையில் நாம் இத்தகைய சிறு செயல்களை எண்ணிச் செய்வதில்லை. இப்பழக்கம் வாழ்க்கையில் முன்னேறு வதற்கு முறைகளை வகுத்துக்கொடுக்கின்றது.

எடுத்துக்காட்டாக நூலகமொன்றில் ஒரு நூல் அதற் கென்று குறிப்பிடப்பட்ட இடத்தில் இல்லை என்றால் எவ்வளவு இடையூறாக இருக்கின்றது? இவை சிறு செயல்களாக இருந் தாலும் சமூகத்திற்குப் பணிபுரியும் ஒருவருடைய பண்பை உருவாக்குகின்றன. ஒரு குறிக்கோளையோ அல்லது நல்லெண் ணத்தையோ நிறைவேற்றுவதற்காக வாழ்ந்த பேரறிஞரான மறைமலையடிகளுக்கு என் நன்றியறிதலையும் பாராட்டுதலையும் அளிக்க விரும்புகிறேன். சிறப்பு மிக்க இத்தருவாயில் தமிழ்

இலக்கியம், நாடு, கலை, பண்பாடு, இவற்றிற்கு அவர் ஆற்றிய அரும்பணியை நினைத்து அவரைப் பாராட்டவேண்டியது நம் கடமையாகும்.

கழகம் இந் நூலகத்தைப் பொது நூலகமாக்கி இலக்கியத்தை விரும்புவோர் அனைவருக்கும் அவர்கள் அறிவை மேலும் வளர்க்க உதவும் என்பதில் ஐயமில்லை. நூலகத்திலுள்ள நூல்களை மக்கள் பலமுறை எடுத்துப் பயன்படுத்தல்வேண்டும். நூல்களைச் சேமிப்பாகச் சேர்த்துவைப்பது மட்டும் நூலகத்தின் நோக்கமன்று. நூல்கள் பலமுறை பல்லோராலும் எடுத்துப் படிக்கப்படல் வேண்டும் என்பதே முதல் நோக்கமாகும். நூலகத்தைத் திறமையாக நடத்துவது நூலக அலுவலரை மட்டுமல்லாது நூலகத்தைப் பயன்படுத்துவோரையும் சாரும்.

எனவே இந் நூல்நிலையம் இன்று திறக்கப்படுகின்றது. உங்கள் எல்லோருடைய வாழ்த்துக்களுடன் திறக்கப்படும் இந் நூலகம் மறைமலையடிகள் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கிறேன். இந்த நல்லதொரு முயற்சியில் ஈடுபட்ட கழகத்தாரை நான் பாராட்டுகிறேன். திரு. பக்தவத்சலம் அவர்களை இந் நூல்நிலையத்தைத் திறந்துவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## நூல்நிலையத் திறப்பு

பின், உள்நாட்டமைச்சரவர்கள் "நூல்நிலையத் திறப்புரை" யினைச் செந்தமிழ் வளம் துளும்ப நாநவில் நலத்துடன் நவின்றனர். அதன் சுருக்கம் வருமாறு :

தமிழ்மொழி நம் தாய்மொழியாகும். கல்வியின் அருமை பெருமைகளை நம் முன்னோர் உணர்ந்திருந்ததுபோல் உலகத்தில் வேறெவரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவ்வுண்மையினை அதற்கமைந்துள்ள 'கல்வி' என்னும் சொல்லே கட்டுரைக்கும். தமிழ்த் தாய்மொழிதானே எல்லாங் கற்றுவிட்டோம்; இனி ஏதுங் கற்கவேண்டுவதில்லை என்று சிலர் எண்ணுகின்றனர். அது தவறு. கல்விக்கு எல்லை இல்லை. "கற்றது கைம்மண்ணளவு கல்லாததுலகளவு" என்பது நம் நாட்டுப் பழமொழி. மேலும் கல்வியினைத் தெய்வமாகக் கருதி அதற்குச் சிறப்பான விழைதக்க வியன்வழிபாடு செய்து வருவதும் நம் தமிழ்நாடு ஒன்றில் மட்டும்தான் உள்ளது. வேறு நாடுகளில் இம் முறையில் இல்லை. அங்கெல்லாம் "தசரா" என்று கொண்டாடுகிறார்கள். கல்வியின் தெய்வமாகிய நாமகளுக்குத் திருக்கையில் ஏட்டுச்சுவடி ஒன்றினை இயைத்துள்ளார்கள்.

அதனாலேயே மேலும் மேலும் நாம் கற்கும் கருத்துடைய ராகவேண்டுமென்பது உறுதி. தமிழிலேயே நாம் கற்கவேண்டும் நூல்கள் அளவிறப்ப உள்ளன. பிறமொழிகளையும் கற்றல் வேண்டும். முன்பெல்லாம் அச்சிற் பதித்த சுவடிகள் கிடையா. அக்காலத்தில் ஏட்டுச்சுவடிகளே உள்ளன. அவற்றை நம் முன்னோர்கள் நன்கு பேணிவைத்துள்ளார்கள். அவர்களை நாம் பாராட்டுதல் வேண்டும். பழங்காலத்தில் இதுபோன்ற நூல்நிலையங்கள் கிடையா. திருக்கோவில்களில் பல வரலாற்றுச் செய்திகளைக் கல்லிற் செதுக்கியுள்ளார்கள். அவைகளே அக்காலத்து நூல்நிலையங்களாகத் திகழ்கின்றன. அவற்றையும் திருக்கோவில்களையும் நாம் காத்தோம்புதல் வேண்டும்.

மறைமலையடிகளார் மும்மொழி வல்லவர். அவர் தமிழுக்குச்செய்த தொண்டு அளவிறந்தன. அவர்கள் திருப்பெயரான் நிறுவப்படும் இந்நூல்நிலையம் மேன்மேலும் சிறந்து பொது மக்களுக்குப் பெரும்பயன் விளைக்குமாக.

தமிழ் நூல்கள் எளிய நடையில் எழுதப்படுதல் வேண்டும். எல்லாரும் எளிதாக வாங்கிக் கற்குமாறு மலிவான விலையில் வெளியிடுதல் வேண்டும். நூல்நிலையமும் விழாவும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

## நூல்நிலையத் தொண்டு

பின் நூல்நிலையப் பேராசிரியர் டாக்டர் பத்மஸ்ரீ எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள் "இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நூல் நிலையத் தொண்டு" என்னும் செவிக்குணவாம் சீரிய விருந்தமிழ் தினைத்திருந்திய தீந்தமிழாற் சுவைபெறச் செப்பி அனைவர்களையும் மாந்தி இன்புறச் செய்தனர்.

இன்றைய எனது பேருரையின் தலைப்பு "நூலகம்" அன்று, நூலகப்பணி. நான் வலியுறுத்தும் இவ் வேறுபாட்டுக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று சிறப்பு. மற்றது பொது.

### 1. சிறப்புக் காரணம்

சிறப்புக் காரணம் இன்றைய பேருரைக்கு வழிவகுக்கும் நிகழ்ச்சியிலேயே அடங்கியுள்ளது.

இன்று நாம் ஒரு மிகமுக்கியமான விழாக்கொண்டாடுகிறோம். ஏடுகளைப் பயன்படுத்துவதில் பெரும் பேரார்வம் கொண்ட ஒருவரால் பல ஆண்டுகளாகச் சிறுகச் சிறுகத் தொகுத்துருவாக்கப்பட்ட ஒரு நூல் தொகுதியை நாம் இன்று

பொதுமக்கள் எல்லாரும் பயன்படுத்தும்படியாக நூலகமாகத் திறந்துவைக்கிறோம். இடைஇருட் காலக் கனதனவான்கள் தம் மதிப்புக்குரிய சின்னங்களாக நூல்கள் தொகுத்துவைத்ததுண்டு. நம் மறைமலையடிகள் செய்தி இதுபோன்றதன்று. அவர் நூல்களை யெல்லாம் முற்கால ஊழிகளின் காலங்கடந்த மதிப்புடைய கருத்துக்களின் திருவுருக்கள் என்றே கருதினார். அவற்றை அந் நிலையிலே பயன்படுத்துவதற்கு அவர் விதிர்விதிர்ப்புக்கொண்டார். தான் பயன் படுத்தியதன்பின், அவர் இதனைச் சேர்த்துத் தொகுத்துவைத்தமுறை சுவையுடைய கனி கிழங்குகளைத் திரட்டி வைத்த சபரியின் செயலையே நினைவூட்டுவதாகும். சீராமன், இலக்குமணன் ஆகியவர்கள் சேவையிலீடுபட்டு அவர் களுக்கு அளிப்பதற்காகவே சபரி அவற்றைத் தொகுத்துவைத் தான். மறைமலையடிகள் இத்தொகுப்பைத் திரட்டியதும் இது போலப் பொதுமக்கள் சேவையை உளத்தில் கொண்டேதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அடிகள் ஏடுகளைத் திரட்டிச்சேர்த்த வகை கடவுளின் திரு வுணவுக்காகக் கண்ணப்பர் உணவு தேர்ந்தெடுத்துச் சேர்த்த முறையை ஒப்பதாகும். முதலில் தான்தின்று சுவை பார்த்துக் கடவுளுக்கேற்றதென்று கருதாத எதனையும் கண்ணப்பர் கடவு ளுக்குப் படைக்க முன்வந்ததில்லை. மறைமலையடிகள் செயலும் இதுபோன்றதே. தொகுதியிலுள்ள நூல்களில் அவர் முற்ற முழுக்க வாசிக்காதது, வாசித்து, இது மக்களுக்கு அளிக்கும் தகுதியுடையது என்று அவர் தேர்ந்தெடுக்காதது ஒன்றுகூடக் கிடையாது. ஏடுகள் ஒவ்வொன்றுக்கும் அவர் தனித்தனியாக அட்டையுறை இட்டுத் தூசுபடாமல் உன்னிப்பாகக் காத்து வைத்த முறையையும்; ஏடுகள் ஒவ்வொன்றையும் வரிவரியாக முழுதும் வாசித்துப் பயன்படுத்திய பின்னும் புத்தம்புதியன போல அவற்றைப் பேணிய வகையையும் காண்போர் வியப்படை யாமலிருக்கமுடியாது. ஏடுகளை அவர் வருங்காலப் பொதுமக்கள் பயனீடு நோக்கியே பேணி வைத்திருந்தாரென்பதற்குச் சான்று கள் தேவைப்படுமேயானால், அதற்கு இஃது ஒன்றே போதியது ஆகும். புத்தகங்கள் பயனீட்டுக்கே உரியவை என்ற எனது நூலகத்துறையின் முதல் ஒழுங்கை அடிகள் தம் நோக்கத்தில் அன்றே கொண்டிருந்தார் என்பது தெளிவு.

### இணை ஒத்த இருசெய்திகள்

நம்கால இந்திய வாழ்விலே அடிகளின் இவ்வியத்தகு சிறப் புக்கு இணையாக இரண்டே இரண்டு செய்திகளைத்தான் நம்மால் எடுத்துக்காட்டமுடியும். ஒன்று சென்னையிலேயே சர். பி. எஸ். சிவசாமி ஐயர் தொகுத்துவைத்த சீரிய ஏட்டுத் தொகுப்பு.

அவரும் தம் எட்டுத் தொகுப்பில் ஒன்றுகூட வாசிக்காது விட்டு வைத்தவர் அல்லர். உண்மையில் அவர் புத்தகக் கடையிலேயே முழுவதும் வாசித்துப் பார்த்துவிட்டு, பிறருக்குப் பயன்படும் தகுதியுடையதாயிருந்தால் மட்டுமே அதை வாங்கி அந்நோக்கத் துக்காகச் சேமித்து வைப்பது வழக்கமாம். தம் எட்டுத்தொகுதி தமக்குப்பின் மெய்யாகவே பொதுமக்கள் சேவைக்குச் செயல் முறையில் வழங்கப்படுமா என்பதுபற்றி வாழ்வின் பிற்பகுதியில் அவர் எவ்வளவோ கவலைப்பட்டதை நான் அறிவேன்.

நூல் தொகுதிகளின் மிகமிகப் பெரிதான மற்றொன்று உண்டு—அந்நாட்களில் தேசத்தில் பல பல்கலைக் கழகங்களின் நூலகங்களில் இருந்துவந்த நூல் தொகுதிகளைவிட அது மிகப் பெரிதாகவே இருந்தது. இதனைச் சேமித்தவர் கல்கத்தாவுக்குரிய சர் அசுடோஷ் முகர்ஜி ஆவர். 1934-இல் நான் இதனைச் சென்று பார்வையிட அழைக்கப்பட்டிருந்தேன். புத்தகங்கள் பெரும் பாலானவற்றிலும் ஓரங்களில் சர் அசுடோஷ் கைப்படக்குறித்த குறியீடுகளும் ஓரக்குறிப்புக்களும் நிரம்பியிருப்பதை நான் கண்டேன். இந்தப் புத்தகங்களைப் பொதுமக்கள் சேவைக் குரியனவாக்குவது எவ்வாறு என்பதே அவர் வாழ்வுக்குப்பின் பெருமாட்டி முக்கர்ஜிக்கும் அவர் புதல்வருக்கும் உரிய மிகப் பெருங் கவலையாயிருந்தது. நல்லகாலமாக, கல்கத்தாவிலுள்ள தேசிய நூலகம் அத்தொகுதியை ஏற்றுப் பேண முன்வந்தபின் இந்தக்கவலை எளிதில் தீர்ந்தது.

மறைமலைத் தொகுதி

மறைமலைத் தொகுதிபற்றி நான் மிகவும் பெருமைப்படு கிறேன். சர் பி. எஸ். சிவசாமியையரையோ, சர் அசுடோஷையோ போன்றவரல்லர் அவர்—அவர் செல்வ வளமிக்க வழக்கறிஞராய் வாழவில்லை. ஏழைக் கல்வியாசிரியராகவே வாழ்ந்தார். சென்னை கிறித்தவக்கல்லூரியில்—நான் பயின்ற கல்லூரியும் அதுவே—இந்திய மொழியரங்கத்தின் தலைவராய்ப் பணியாற்றியவர் அவர். ஆயினும் நாம் ஒப்பிட்டுக்காட்டிய மூன்று எட்டுத் தொகுதிகளி லும் மிகவும் வாய்ப்பு வளமிக்க தொகுதி மறைமலையினதே யாகும். அவரே தோற்றுவிக்கக் காரணமாயிருந்த தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகமென்ற வெளியீட்டகம் தன் அமைப்பு விதி களினடிப்படையிலேயே இத் தொகுதியைப் பேணி மேன்மேல் வளர்க்கும் கடப்பாடும் ஆற்றலும் உடையதாய் அமைந்துள்ளது. இம்முறையில் இத்தறுவாயில் நான் ஒரு தனி வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இலவசப் பொதுமக்கள் சேவைக்கே செலவிடப்படுகிற சைவசித்தாந்த நூல்வெளியீட்டுக் கழகத்தின் சேமிப்பிலும் தன் ‘தசைப்பங்’கை விடாப்பிடியாகக் கோரும்

மைய வருமானக்குழுமத்தாரின் (Central Board of Revenue) கண்மூடிக் கண்டிப்பு, உண்மையில் நாட்டுநல முன்னேற்றத்துக்கு உகந்ததன்று என்பது அவர்கள் எண்ணிப்பார்த்துணர வேண்டிய ஒரு செய்தியாகும். சட்டசபை அரசாங்க வரிசையில் இருப்பவருள் நாட்டியல்வாதியாகிய எவரேனும் இதில் குறுக்கிட்டு ஒரு நல்ல ஆணை பிறப்பித்துதவவேண்டுமென்றே கருதுகிறேன். பொதுமக்கள் சேவைக்கு என ஒதுக்கிவைக்கப்படும் நிதிகளிலும் பொதுநிதித்துறையினர் இறையுரிமை பற்ற எண்ணுவதென்பது தட்டான் தன் மனைவிக்குரிய நகை செய்வதிலும் மறைவாகப் பொன் எடுத்துக் கொள்ள முனைந்த பழங்கதையுடனொத்த பரிசேயாகும்.

**வாய்ப்பான நற்கூறுகள்**

மறைமலைத் தொகுப்புக்குக் கிட்டியுள்ள வாய்ப்புவளம் நிலவரமான நிதி ஆதாரவளம் மட்டுமன்று. இன்று அதற்கென ஒரு மனையிடமும் அளிக்கப்படுகிறது. அதற்குரிய தனித்தன்மையும் சிறப்பும் இதனால் முற்றிலும் காக்கப்படுகின்றன. அத்துடன் மறைமலையடிகள் தம் கடைசி மூச்சுவரையிலும் தம் வாழ்நாள் முழுவதும்—அறிவுடன் உயிர்த்துடிப்புடைய உழைப்பும் எப்போதும் நிரம்பிப் பொங்கிப்பொதுளிக்கொண்டிருந்த அவர் வாழ்வில் என்றுகூடக் கூறுவேன்—இடைவிடாது ஈடுபட்டுச் செயலாற்றி வந்த அதே புலமை சான்ற பணியைத் தொடர்ந்து செய்வதற்குரிய மையஇடமாக இது விளங்க இருக்கிறது.

இந்த இடத்தில் நான் ஒரு செய்தியை விடாது குறிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மறைமலையடிகளாரின் உடனுழைப்பாளர்கள்—சிறப்பாகத் திரு. சுப்பையாபிள்ளையவர்கள்—எவ்வளவோ ஆர்வத்துடனும் இடைவிடா அரு முயற்சியுடனும் இந்நிலையத்துக்குரிய திட்டங்களை நுணுக்கவிரிவாகத் திட்டமிட்டு வந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இக்கட்டடத்தைப் பார்வையிடுவதற்காக அவர் என்னை அழைத்தபோது இந்தப் பழமைக் கட்டடத்தைத் தம் புதிய பயனீட்டுக்காக என்னென்ன வகையில் திருத்தியமைக்கலாம் என்பது பற்றிய என் கருத்துரைகளைக் கேட்க அவர் எவ்வளவு ஆவலுடையவராயிருந்தார் என்பதை நான் மறந்துவிடவில்லை. அச்சமயம் அவரிடம் காணப்பட்ட ஆர்வத்துடிப்பு, வருங்காலத்தில் இந்நிலையம் இலக்கிய வளர்ச்சிக்கும் பண்பாட்டுக்கும் உதவும் முறையில் என்ன என்ன நடைமுறைகள் திட்டமிடப்படவிருக்கின்றன என்பது பற்றிய அவர் விளக்கத்தின் உறுதித் தொனி ஆகிய இவற்றை நான் இன்னும் என் மனக்கண்முன் [illegible]ண்கிறேன். நூலகத்தில் நுழையும்போதே

நுழைபவர்முன் காட்சிதரும் பொன்வேய்ந்த அம்பலவாணர் திருவுருவின் குமிண் சிரிப்பு திட்டமிடப்பட்ட இந் நூலகத்தின் சேவையையும் அதன் மூலம் இயக்கப்படவிருக்கும் புத்தறிவுப் படைப்பின் அலையெழுச்சியையும் குறித்துக்காட்டுவதாகும்.

(இப் பேச்சு அடுத்த இதழில் தொடரும்)

பின்பு நூல்நிலையம் சென்னை உள்நாட்டமைச்சர் தம் திருக் கையால் வெள்ளித் திறவுகோல் கொண்டு உள்ள மகிழ்வுடன் திறக்கப் பெற்றது.

ஓம்

**மறைமலையடிகள் நூல்நிலையம்**

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த சங்க ஆதரவில்

சென்னை மாநில ஆளுநர்

மாண்பமை **விட்ணுராம் மேதி** அவர்கள்

தலைமையில்

சென்னை உள்நாட்டமைச்சர்

உயர்திரு எம். **பக்தவத்சலம்** அவர்களால்

விளம்பி ஆண்டு ஆவணித்திங்கள் அ-ஆம் நாள்

திறந்து வைக்கப்பெற்றது.

**(24-8-1958)**

தலைவர் : செயலாளர் :

மு. காசிவிசுவநாதன். வ. சுப்பையா.

எனக் கண்கவர் வனப்பமை பளிங்குக் கல்லில் கைபுனை வல்ல சிற்பியினால் அழகுறப் பொறிக்கப் பெற்று அகமதிலின்கண் பதிப்பித்துள்ள எழுத்துக் கல்லினையும் விழுப்பமுறத் திறந்து வைத்தனர். ஆளுநர் உள்ளிட்ட பெருமக்கள் அனைவர்களும் மங்கலப் பொருளுடன் வரவேற்க உட்புகுவாராயினர்.

புக்கதும் பொன்மேனியுடன் பொலியும் அம்பலவாணரின் அடியிணைப் போற்றித் தொழுதனர். மாடிமீதிவர்ந்தனர். நூலகத்தையும், நூற்பேழைகளையும், நூற்களையும் நுண்ணிதின் நோக்கினர்; உண்ணிதின் மகிழ்ந்தனர். உற்றுரை வரைந்தனர்.

பின் திரு. வ. சு. அவர்களால் நன்றியுரை நவிலப்பெற்றது. அருட்கவி சேதுராமன் அவர்களால் "வாழ்க அந்தணர்" என்னும் செந்தமிழ்த் திருமறை பாடப்பெற்றது.

இத்துடன் முற்பகற் கூட்டம் இனிது நிறைவுற்றது.

## பிற்பகல் நிகழ்ச்சி

மாலை ஐந்துமணிக்கு மிக்க சிறப்புடன் துவங்கப் பெற்றது. தலைமை தாங்கி நடத்தும் நிலைமைக்கு இசைந்துள்ள திருப்பெருந் திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் நிலப் பொறியூர்தி வழி யாகச் செல்லும் எல்லையில் எதிர்பாராத வண்ணம் சிற்றிடர் ஒன்று வந்துற்றது. அதனால் அவர்கள் வருதற்கியலவில்லை.

உயர்திரு. சைவப்பாதிரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை பி.ஏ., எல்.டி., அவர்கள் தலைமை தாங்கப் பிற்பகற் கூட்டம் மிக்க சிறப்புடன் துவங்கப் பெற்றது. பேரவைப் பெருமக்களும் முற்பகல் போன்றே பெருவெள்ளமாகக் குழுமியிருந்தனர்.

காஞ்சீபுரம், தேவார இசைப் புலவர் திரு. சாரங்கபாணிச் செட்டியாரவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடப் பேரவை தொடங் கப்பெற்றது. திரு. வ. சு. அவர்கள் வரவேற்புரை வழங்கினர். அது வருமாறு:

உங்கள் அனைவருக்கும் என் அன்புகலந்த வணக்கம். இன்று காலையில் சென்னை மாநில ஆளுநர் மாண்பமை விட்ணுராம் மேதி அவர்கள் தலைமையில் சென்னை உள்நாட்டமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள், செந்தமிழ்ச்செல்வர், மும்மொழிப் புலமைசேர் மறைமலையடிகள் அவர்கள் நூல்நிலையத்தைத் திறந்து வைத்ததைக் கண்டீர்கள். உலகப் புகழ்பெற்று மேலை நாடுகளெல்லாம் சென்றுவந்த டாக்டர். எஸ். அரங்கநாதன் அவர்கள் "இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் நூல்நிலையத் தொண்டு" என்பதைப்பற்றிப் பேசினார்கள்.

நம்முடைய தமிழ்மொழிக்கு இருகண் எனத்திகழும் மறை மலையடிகள், பேராசிரியர். கா. சுப்பிரமணியபிள்ளை இருவருடைய படங்கள் திறந்துவைக்கப்படவிருக்கின்றன. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் படத்தைத் திரு. மொ. அ. துரைஅரங்கனார் அவர்கள் திறந்துவைக்க இசைந்துள்ளார்கள். துரைஅரங்கனார் பல்கலைக் கழகத்தில் வாசகராகப் பணியாற்றுபவர். சச்சிதா னந்தம் பிள்ளை அவர்கள் என் அண்ணனார் திரு. திருவரங்கம் பிள்ளை அவர்கள் படத்தைத் திறந்து வைப்பதாக இருந்தது. குன்றக்குடி அடிகளார் வாராமையால் அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். ஆதலால் என் தமையனார் படத்தைத் திரு. கா. அப்பாத்துரைப் பிள்ளை அவர்கள் திறந்துவைப்பார்கள். திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் வரமுடியாமை தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளார்கள். நீங்கள் அனைவரும் அமைதியாக இருந்து கூட்டத்தைச் சிறப்பிக்குமாறு மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தலைவரவர்கள் மறைமலையடிகளார் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்துத் தக்கதோர் முன்னுரையும் மொழிந்தனர். அதன் சுருக்கம்:

## திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் சுருக்கம்

மறைமலையடிகள் நூல்நிலையத்தைத் திறந்துவைக்கும் இந்நாள் ஒரு சிறந்த நாள். காலை நிகழ்ச்சியின்போது பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர் இப்போதும் பல அறிஞர்கள் பேச முன்வந்துள்ளனர். இந் நிகழ்ச்சிக்குத் திரு. குன்றக்குடி அடிகளார் தலைமை தாங்குவதாக இருந்தது. அவர்களுக்கேற் பட்ட இடையூற்றை அறிந்து வருத்தப்படாமலிருக்க முடியாது. அவர்கள் இடத்தில் என்னை அமரும்படி கேட்டுக் கொண்டார்கள்.

மறைமலையடிகளைப் பற்றிப் பலர் பேசுவார்கள். பெரும்பணி யாற்றிய பெருமக்களைப் போற்றுவதால் சாதாரண மக்களுக்கும் பெருமக்களாகும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

மறைமலையடிகளை அறிந்தவர்கள் பலருள் திரு. வி. க. ஒருவர். திரு. வி. க. மறைமலையடிகளாரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது "அற்றை நக்கீரனும் இற்றைச் சிவஞானமுனிவரும் ஓர் உருக்கொண்டு வேதாசலமானர் போலும்" என்று கூறியுள்ளார். அவர் இருவரும் ஓர் உருக்கொண்டு தமிழை வளர்க்கின்றார். "அவர்தம் தமிழ் உடலும், தமிழ் உருவும், தமிழ்ப் பொருளும் என்னை அவருடைய தோழனுக்கின. தொண்டனுக்கின" என்றும் திரு. வி. க. கூறியுள்ளார்.

மறைமலையடிகள் தமிழ் வானில் தூய திங்களாக விளங்கியவர். அத்தகைய சிறந்த பண்பாடுடைய மறைமலையடிகளின் வரலாற்றைப் புலவர் அரசு அவர்கள் எழுதியுள்ளார்கள். "மறைமலையடிகள்" என்பது நூலின் தலைப்பு. நூல் எளிய இனிய நடையில் இயற்றப்பெற்றுள்ளது. அந்நூலைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் செம்மையாகவும் அழகாகவும் பதித்து வெளியிட்டுள்ளார்கள் என மொழிந்தனர்.

சித்திரகவி திரு. அப்துல்கபூர் சாகிப் அவர்கள் விழா நிகழ்ச்சியனைத்தையும் அழகிய பாமாலையாக யமைத்துப் பாடி எல்லாரையும் மகிழ்வித்தனர். அப் பாட்டு மற்றோர் பக்கத்திற் காண்க.

## சோமசுந்தர நாயகர் படத்திறப்பு

இரண்டாவதாக மாம்பாக்கம் குருகுல ஆசிரியர் உயர்திரு இளவழகனர் அவர்களால் சோமசுந்தர நாயகர் அவர்கள் திரு

வுருவப்படம் திறக்கப்பட்டது. பின் அரியதொரு விரிவுரையும் நிகழ்த்தினார்கள். அதன் சுருக்கம் வருமாறு :

மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழாவில் அவர் ஆசிரியர் சோமசுந்தர நாயகரின் உருவப்படத்தை மறைமலையடிகளின் மாணவனாகிய என்னைக்கொண்டு திறந்துவைப்பதில் ஒரு முறை இருக்கிறது. மறைமலையடிகளுக்குத் தந்தையார் திரு. சோமசுந்தர நாயகர். ஆகையினாலே சோமசுந்தர நாயகர் எனக்குப் பாட்டனார். பாட்டனாருடைய படத்திறப்பைப் பெயரனாகிய என்னைக்கொண்டு திறக்க வைப்பது சரியான முறையே. அடிகள் விழாவில் அவர் படத்திறப்புஞ் சரியே.

மறைமலையடிகளுடைய அருள்தந்தை சோமசுந்தர நாயகர். பிள்ளைகளைக்கொண்டுதான் பெற்றோர் சிறப்படையவேண்டும். அப்பொழுதுதான் தலைமுறை தலைமுறையாக நாடு உயரும். சோமசுந்தர நாயகர் மறைமலையடிகட்கு அகமருவிய ஆசிரியர். மறைமலையடிகளை நாயகர் மகன்போல வளர்த்தார்கள். அடிகளாருடைய இல்லத்திற்கு நாயகர் அவர்கள் அடிக்கடி செல்வதுண்டு. நாயகர் அவர்களுடைய மகன் அவ்வளவு அறிவிற் சிறந்தவனல்லன். அதனால் மறைமலையடிகளையே தம் சொந்த மகனாக நாயகர் எண்ணி வந்தார். அறிவறிந்த மக்கட்பேறாக அடிகள் விளங்கினார்.

அக்காலத்தில் நாயகர் என்றாலே சோமசுந்தர நாயகரைத்தான் குறிக்கும். நாயகர் என்ற சிறப்புப்பெயர் இயற்பெயரை விடச் சிறப்பாக விளங்கியது. நாயகர் என்ற பெயர் எந்தக் காலத்திலும் யாரையாவது குறித்துக்கொண்டே நிற்கின்றது. நக்கீரர் என்பதில் 'ந' என்ற எழுத்து நன்மைப் பொருளையும் சிறப்புப் பொருளையும் உணர்த்தி நிற்கின்றது! 'ந' நன்மைப் பொருளுக்கு ஒரு சுருக்கெழுத்து. நாயகம் என்றால் தலைமைப் பொருளை உணர்த்தும். அது மருவி நாயகர் என நிற்கலாயிற்று. நாயகர் என்பது நன்மைப்பொருளையும் சிறப்புப் பொருளையும் தலைமைப்பொருளையும் உணர்த்துகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சோமசுந்தர நாயகரவர்களின் வரலாற்றைச் சிறந்த ஆராய்ச்சி முறையிலே அவருடைய மாணவரான மறைமலையடிகளார் எழுதியுள்ளார். அது அரைகுறையாகவே நின்றுவிட்டது. வாழ்க்கை வரலாற்றை அடிகளார் முற்ற முடிக்குமுன் அவர்கள் வாழ்க்கை முடிந்துவிட்டது. எனவே அஃது அவ்வாறே சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொன்றைப் பாடிய ஔவையார் தொண்டை நாட்டிற்கு மட்டும் ஏன் சான்றோர் உடைத்து என்று பாடினார். ஏதோ காரணம் இருக்க வேண்டும். சேர சோழ பாண்டியராய மூன்று நாட்டினருடைய பெருமையையும் தொண்டை நாடுதான் வெளிப்படுத்தியது. பாண்டி நாட்டிலே பிறந்து பிறநாடுகள் அனைத்தையும் சுற்றிவந்த மாணிக்கவாசகர் நிறைந்த பண்பைப் பெற்றது தொண்டை நாட்டில்தான். தன்னலத்தோடல்லாது தொண்டு செய்வதில் சிறந்த நாடு தொண்டைநாடு.

திரு. சோமசுந்தர நாயகர் அவர்களின் வரலாற்றைப் படித்த எனக்கு அவருடைய மூன்று பண்புகள் சிறப்பாகத் தோன்றின. ஒன்று அவருடைய அறிவு. இரண்டு அவர் தம் ஆற்றல். மூன்றாவதாக உண்மை. நாயகர் சிறந்த அறிவு வாய்ந்தவர் உரிமையை நிலைநாட்டும் ஆற்றலைப் பெற்றிருந்தார். நடுநிலை தவறாது உண்மையை உரைக்கும் பண்பாளர் அவர். இம் மூன்று திறங்களையும் நாடிச்செல்லும் உண்மையான அறிவு அவரிடம் இருந்தது.

## திரு. டி. செங்கல்வராயனவர்கள் பேச்சு

பின் சென்னை முன்னாள் நகராட்சித் தலைவர், அட்வகேட் உயர்திரு, டி. செங்கல்வராயன் அவர்கள், மறைமலையடிகளாரின் மாண்பு பற்றி விழைதக்க விரிவுரை குழைவுறக் கூறினார்கள். சுருக்கம் வருமாறு :

இந்த மறைமலையடிகள் நூல் நிலையத் திறப்புவிழாவில் என்னையும் வந்து பேசும்படி வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். தகுதியும் மிகுதியும் வாய்ந்த பல தலைவர்கள் இந்த விழாவில் கலந்துகொள்ளும்போது நான் ஏன் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டதற்கு மறைமலையடிகளாருடன் நேராகத் தொடர்பு கொண்டவராதலால் கலந்து கொள்ளவேண்டும் என்று கூறினார்கள்.

நான் மறைமலையடிகளை நீண்டநாள் சந்திக்கவில்லை. இரண்டு மூன்று நாள் சந்தித்திருக்கிறேன். அடிகளாருடைய மகனாராய மறை. திருநாவுக்கரசு, என்னை ஒருமுறை அவர் தந்தையாரிடம் அழைத்துச் சென்றார். அப்பொழுது அடிகளார் இறை வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார். அதனால் நான் இருந்த இடத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்தேன். அங்கிருந்த பல படங்களில் என்னுடைய பாட்டனாரின் படமும் இருந்தது. இறைவழிபாட்டை முடித்து வந்த மறைமலையடிகள், " உங்களை எங்கோ

பார்த்திருப்பதாக நினைவு'' என்று கூறினார்கள். நான், "என்னைப் பார்த்திருக்கமாட்டீர்கள், என் பாட்டனாரைப் பார்த்திருப் பீர்கள்'' என்று கூறினேன். "ஆம், உங்கள் பாட்டனாருடன் ஒன்றரை ஆண்டு தங்கியிருந்தேன். அவர் கிறித்துவக் கல்லூரி யில் வேலை வாங்கித் தந்தார்'' என்று உரைத்தார்.

மறைமலையடிகளைப் பாராட்டும் இவ் விழாவில் என்னைப் போன்றவர்கள் கலந்துகொள்ளாவிடில் எங்கள் பிறப்பு வீணே. அடிகளாருடைய அறிவின் அகலமும், சிந்தனையின் சிகரமும், ஆராய்ச்சியின் ஆழத்தையும் யார்தான் சொல்ல முடியும்?

அடிகள் மூன்று வகையாகத் தமிழுக்கு அரிய தொண்டு ஆற்றினார்கள். பழைய பண்பைப் புத்துணர்ச்சி கலந்துகொடுத் தார்கள். தமிழருடைய பண்டைய பண்பாட்டை மறந்துபோக முடியாதபடி புத்துணர்ச்சியைக் கலந்து அவைகளைப் புதுமெரு கேற்றி மக்களுக்குத் தந்தார்கள். பழைய நூல்களுக்குப் புத்துரை கண்டார்கள்.

அடிகள் தமிழ்த் தொண்டாற்றும் பொழுது அதனுடன் சமயத் தொண்டையும் இணைத்து இரண்டையும் ஒன்றாகச் செய்தார்கள். ஏனெனில் தமிழைப் பிரித்தால் சமயம் இல்லை. சமயத்தைப் பிரித்தால் தமிழ் இல்லை.

தமிழ் மொழியின் அறிவையும் பிற மொழிகளின் மூலம் பெற்ற அறிவையும் கலந்து தமிழில் கொடுத்தார். அப் பணி அவர் ஒருவரால்தான் முடியும். தமிழின் பெருமையையும் பிற மொழிகளின் தன்மைகளையும் எடுத்து ஆராய்ந்து தமிழ் மொழியே சிறந்தது என்று கூறினார்.

அவர் பெயரில் இன்று நூல் நிலையம் ஒன்று திறந்து வைத் திருக்கிறார்கள். மறைமலையடிகள் இன்று இருந்திருந்தால் என்ன நினைத்திருப்பார்? அவர்களே மக்கள் நூறாண்டு வாழ்வ தெப்படி என்னும் நூலை ஆக்கியுள்ளார்கள். நானும் அதைப் படித்திருக்கிறேன். அவர்கள் இன்று வாழ்ந்திருந்தால் தமிழ் மொழி எவ்வாறு இன்று பரவியுள்ளது, தமிழ் நாடு எவ்வளவு முன்னேறியுள்ளது என்பதைப் பார்த்து மகிழ்வார். தமிழன்னை அரியாசனம் ஏறியபொழுது எனக்கு மறைமலையடிகளின் நினைவு தான் வந்தது. இவை யாவும் அவருடைய தொண்டு.

## பேராசிரியர் சுந்தரம்பிள்ளை படத்திறப்பு

தமிழ்க்கலை மன்றச் செயலாளர் ராவ்சாகிப், கு. கோதண்ட பாணிப் பிள்ளை, பி. ஏ. அவர்கள், பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்

களின் உருவப் படத்தைத் திறந்து வைத்துத் தக்க விரிவுரை நிகழ்த்தினார்கள். சுருக்கம் வருமாறு:

"பேரறிவாளர், அரும்பெரும் புலவர், தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பெருந் தொண்டாற்றிய தமிழ்த் தொண்டர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஆவார். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியத் துறையில் இருந்துவந்த பெருங் குறையை நீக்கி, மனோன்மணீயம் என்னும் சிறந்த நாடகநூலை இயற்றிய பெருமகனாரைத் தமிழ்நாடு என்றும் போற்றக் கடமைப்பட்டுள்ளது. இன்று நாம் கொண்டாடுவது மறைமலை யடிகள் நூல்நிலையத் திறப்பு விழா. இவ்வடிகளாருக்கும் சுந்தரம் பிள்ளை அவர்களுக்கும் நேர்ந்த தொடர்பை எடுத்துக்காட்டுவதே இவ்விழாவிற்கும் இப் படத்திறப்பிற்கும் மிகப் பொருந்துவ தாகும். இத்தொடர்பை விளக்குமுன் மறைமலை அடிகளின் அரிய செயல்களுள் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அது, அவர் எழுதிவைத்துச் சென்ற இறுதி முறி. தாம் அரும்பாடு பட்டுத் தேடிய சொத்தின் பெரும்பகுதியையும் தம் சொந்தச் செலவில் சேர்த்துக் காப்பாற்றிய நாலாயிரத்திற்கு மேற்பட்ட விலைஉயர்ந்த நூல்களையும் இறுதி முறியின்படி பொதுமக்களுக்கு உரியவையாக்கினார். இவற்றின் மதிப்பு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் ஆகும் என்பர். அடிகளாரோ பெரிய செல்வர் அல்லர். அவர் மக்களும் எளிய நிலையிலே வாழ்பவர்கள். அவ்வாறிருந் தும் தாம் தேடிய சொத்தைப் பொதுமக்களுக்கு விட்டுச் சென்ற மனப்பான்மையைக் கருதுங்கள். அவர் தொண்டாற்றிய காலத்தில் பொதுமக்கள் அடிகளாருக்குப் போதிய ஆதரவு அளித்தாரல்லர். அடிகளாரைப் போற்றினாரும் அல்லர். போற்றாததுமட்டுமோ? அடிகளாரைத் தூற்றவும் செய்தனர். தமக்கு ஆதரவு அளிக்காத பொதுமக்களுக்கு, தம்மைப் போற்றாத பொதுமக்களுக்கு, தம்மைத் தூற்றிய பொதுமக்க ளுக்குத் தம் சொத்தை உரிமையாக்கிச் சென்றார் என்றால் அடிகளாரின் அன்பையும் அருளையும் என்னென்று கூறுவது! இதுவன்றோ செயற்கரிய செயல்! 'தியாகம்' என்பது இதனின் வேறுண்டோ! இவ்வாறு தங்கள் சொத்தைப் பொதுமக்களுக்கு விட்டுச் சென்றவர்கள், உரோமாபுரியை ஆண்ட சீசர் என்னும் அரசர், பிரான்சு நாட்டு அரசர் நெப்போலியன் என்பர். இப் பேரரசர்கள் செய்த பெருஞ்செயலைத் தமிழ்நாட்டில் ஒரு புலவர் பெருமகனார் செய்தார். அடிகளாரின் படம் இந்நூல் நிலையத்தில் மட்டுமா இடம் பெறுவது? ஆளுநர் படங்களோடு, அமைச்சர் கள் படங்களோடு அரசாங்க மண்டபங்களில் அடிகளாரின் படம் இடம் பெறல்வேண்டும். ஒவ்வொரு தமிழன் இல்லத்திலும்

இடம் பெறல் வேண்டும். அப்போதுதான் அடிகளார் செய்த பேருதவிக்கு ஒருவாறு கைம்மாறு செய்தோர் ஆவோம்.

இனி, சுந்தரம்பிள்ளை அவர்களின் தொடர்பு அடிகளாருக்கு மிக இளமையிலேயே, 19-ஆம் அகவையிலேயே, ஏற்பட்டது. அடிகளார் கடிதமாக எழுதியனுப்பிய ஆசிரியப்பாவைக் கண்டு பிள்ளை அவர்கள் மகிழ்ந்தார். அடிகளாரைத் தம்மிடம் வருவித்தார்; ஆசிரியராகச் சில திங்கள் பணியாற்றவும் செய்தார். பிள்ளையவர்கள் அடிகளாரின் ஆழ்ந்த படிப்பையும் சிறந்த அறிவையும் பாராட்டி நற்சான்று ஒன்றும் அளித்தார். (நற்சான்றுக் கடிதம் படிக்கப்பட்டது) இந்த நற்சான்றில் கண்டவாறே அடிகளார் சிறந்த ஆசிரியரானார், எழுத்தாளர் ஆனார், ஆராய்ச்சி ஆளரும் ஆனார். விவேகானந்தருக்கு இராமகிருட்டிணர் அமைந்ததுபோல அடிகளாரின் சமயத்தொண்டிற்குச் சோமசுந்தர நாயகர் அமைந்தார்; தமிழ்த் தொண்டிற்குச் சுந்தரம் பிள்ளை அவர்கள் அமைந்தார். "'ஆரியம்போல் உலகவழக்கு அழிந்து ஒழிந்து சிதையாவுன் சீரிளமை', 'பத்துப்பாட்டாதி மனம் பற்றினர் பற்றுவரோ, எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே', 'வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள், உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொருநீதி' எனப் பிள்ளை அவர்கள் பாடிய மூன்று கருத்துக்களை நினைவுகொள்ளுங்கள். இம்மூன்றின் விரிவுரையாக அமைந்தவை: அடிகளாரின் பேச்சு, அவர் எழுத்து, அவர் நூல்கள், அவர் தமிழ்த்தொண்டு. இத்தகு தொண்டுகளைத் தூண்டிய பிள்ளை அவர்களின் தொடர்பைப் போற்றுவோம். பிள்ளை அவர்களின் படத்தை அமைத்து 'மகிழ்ந்து நிதம், பாடி இனிது போற்றுவமே'".

## அறிஞர் அண்ணாத்துரை பேச்சு

அறிஞர் சி. என். அண்ணாத்துரை, எம்.ஏ., எம்.எல்.ஏ., அவர்கள் தண்டமிழ் மழைபொழியத் துவங்கும்போது வான்மழையும் தான் வரவிரும்பியது போன்று மின்னும் தூறலும் துன்னி வந்தன. மக்கள் அதனைப் பொருட்படுத்தாது நிற்கவே அவ்விரண்டும் மகிழ்ந்து வானம் செவ்வையுற விளங்கின. சொற்பொழிவும் பொற்புறப் பொழியப்பட்டது. சுருக்கம் வருமாறு:

காலையில் துவக்கப்பட்ட மறைமலையடிகள் படிப்பகத் துவக்க விழாவையொட்டி, இப்போது நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பல தமிழறிஞர்கள், தமிழர்களுக்குத் தரவேண்டிய கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள். இப்படிப் பலரும் ஒன்றுகூடிக்

கருத்துக்களைத் தருவது, தமிழர்களுக்குச் சில வேளைகளில் மட்டுமே கிடைக்கக் கூடியதாகும்.

எனவே, இங்குப் பெறுகிற கருத்துக்களைத் தமிழர்கள், நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மறைமலையடிகளாரின் மாண்பினை — எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் வியக்கத்தக்க மாண்பினை அவரோடு நெருங்கிப் பழகிய பலரும் எடுத்துரைத்திருக்கிறார்கள். நான் அவரோடு அதிகம் நெருங்கிப் பழகியவன் அல்லன்; அவரோடு எங்களுக்கு ஏற்பட்ட தொடர்பெல்லாம், இந்த நாட்டில் முதல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போதுதான்.

மறைமலையடிகளாரது புலமை, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த எங்களுக்கெல்லாம் பெரும் அரணாக அமைந்திருந்தது. இந்தி தமிழகத்திற்குத் தேவைதானா? அது தமிழகத்திற்குப் பொது மொழியாகத்தான் வேண்டுமா? அப்படிப் பொது மொழியானால் தமிழுக்கு ஏற்படக்கூடிய தீமைகள் என்னென்ன என்பதை எல்லாம் மறைமலையடிகளார் ஏடுகளின் வாயிலாக எடுத்துக் காட்டிவந்தார்கள்.

இதைப்போல, அவர் மேற்கொண்டிருந்த பல்வேறு முயற்சிகள் இன்று காலத்தால் கனிந்து வருகின்றன.

மறைமலையடிகளது திருப்பெயர்—பெற்றோரிட்ட பெயர் 'வேதாசலம்' என்பதாகும். அதனை அவர் மறைமலை அடிகள் என மாற்றிக்கொண்டபோது பலருக்கு ஐயப்பாடு! சிலர், 'இது என்ன புதியதோர் ஆபத்து?' என்று கேட்டனர்.

ஆனால், மறைமலையடிகளாரோ 'தமிழனுக்கு எனத் தனிப் பண்பு உண்டு; மொழி உண்டு' என்பதை நிலைநாட்டுவதில் மிக்க அக்கறை காட்டினார். 'இந்தப் பண்பும் மொழியும் காப்பாற்றப்படாவிடின், நாளாவட்டத்தில் தமிழர்கள் இந்த மொழியையும், பண்பையும் மறந்து, தங்களுக்கென உள்ள சீரிய தன்மையை இழந்துவிடுவர்; உலகில் இன்றுள்ள வாழ்விழந்த இனத்தாரோடு தமிழரும் சேர்க்கப்பட்டுவிடுவர்; எனவே, தமிழர்கள், தங்கள் மொழியையும் பண்பையும் மறந்துவிடக்கூடாது' என்பதற்காக மறைமலையடிகளார் தனித் தமிழ் இயக்கம் என்ற பெயரால் சீரியதோர் முயற்சியை மேற்கொண்டார்கள்.

இந்த இயக்கத்தை அவர் தோற்றுவித்தபோது, 'இது வெற்றி பெறுமா?' என்று சிலரும், 'இது தேவைதானா?' என்று வேறு சிலரும், 'இதனால் தமிழகத்திற்கும், தமிழர்களுக்கும்

என்ன இலாபம்?' என மற்றும் சிலரும் வினவத் தொடங்கினார்கள்.

ஆனாலும் இன்று, யார் நடத்துகின்ற ஏடானாலும்—தனித் தமிழ் இயக்கத்தை எதிர்த்தவர்கள் ஏடானாலும் அதில் தனித் தமிழ் நடை கையாளப்படுவதை நாம் காணுகிறோம்.

மறைமலையடிகள், தமது புலமையும் திறமையும் சாதாரணமாக வெளிப்பட்டால் மட்டும் போதாது; அந்தப் புலமையும் திறனும் தமிழர்களுக்கு வாழ்வளிக்கும் நோக்கமுடையவாயிருக்கவேண்டும் என்று கருதினார்.

அத்தகைய பெருந்தகை—பெரும் புலவர் தம் வாழ்நாளில் தொட்டுத் தொட்டுப் பார்த்து, எடுத்து எடுத்துப் படித்த ஏடுகளைக் கொண்ட நூலகத்தை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இன்று திறந்துவைத்துள்ளனர். தமிழர்களுக்கு நல்ல ஆராய்ச்சித் திறனைத் தரவல்லதாகும் மறைமலையடிகளாரின் இந்நூலகம்.

இன்று நாட்டில், 'படிப்பது தேவைதானா?' என்ற ஒரு விசித்திரமான கேள்வியும் எழுப்பப்படுவதைக் கேட்கிறோம்.

'கல்லின் ஓசையிலிருந்தும் கருத்துப் பெறலாம்; ஓடும் ஆற்றிலிருந்தும் கருத்துப் பெறலாம்' என்று ஷேக்ஸ்பியர் கூறியதைப்போல, 'பெரியவர்கள் சொல்வதைக் கேட்பதாலும், காட்டும் தெளிவைக் காண்பதாலும், அறிவு பெறமுடியாதா?' என்று கேட்கப்படுகிறது. இத்தகையோருக்கு, ஆயிரம் ஷேக்ஸ்பியர்களின் அறிவுக் கதிர்களும் பயன்படமாட்டா.

இந்தக் கேள்வியையும் தாண்டி, 'படிக்கவேண்டும்' என்ற ஆர்வம் மெள்ள அரும்பியிருப்பதைக் காண்கிறோம்.

ஆனால் அதே நேரத்தில், தமிழர்கள் செய்யவேண்டிய காரியங்கள் இரண்டு உண்டு; ஒன்று—படித்த சிலவற்றை மறக்கவேண்டும்; படிக்க மறந்துவிட்ட பலவற்றைப் படிக்கவேண்டும். இவைதாம் தமிழர்கள் ஒரே நேரத்தில் செய்யவேண்டிய இரண்டு காரியங்கள்.

எதையோ ஒன்றைப் புகுத்தவேண்டும் என்ற நோக்கமுடைய நூல்கள் இருக்கின்றன. எதையோ சிந்தித்துப் பார்க்கத் தூண்டும் நூல்கள் இருக்கின்றன.

இதை உணர்ந்த மறைமலையடிகள்—தமிழர்களுக்கு அவர்களது தனி நாகரிகம் எது? அவர்கள் வணங்கத் தக்கன எவை? அவர்கள் மொழியின் மாண்புகள் என்னென்ன?—

என்பதையெல்லாம் ஆராய்ந்து, மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்தம் கருத்துக்களை அறிகிறவர்கள், படிக்கத் தக்க நூல்கள் எவை என்பவற்றை அறிந்துகொள்ள முடியும்; சிந்திக்கத் தூண்டும் நூல்கள் எவை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இப்படிச் சொல்லும்போது, 'அண்ணாத்துரை! மறைமலையடிகள், சமயத்துறையில்—சைவத்தில் நம்பிக்கை வைத்திருந்தாரே, உங்களுக்கு அது சம்மதமா?' என்று சிலர் கேட்கக்கூடும். 'அன்பும் அருளுமே சைவம்' என்று மறைமலையடிகள் கூறியதுதான் சைவம் என்றால்—நான் மிகச் சிறந்த சைவன். 'ஆண்டவன் ஒருவனே' என்பதுதான் சைவம் என்றால்—நான் மிகச் சிறந்த சைவன்.

இன்று உலகில் மார்க்கத்தை மட்டுமல்ல—எல்லாவற்றையுமே, 'இது எனக்கு என்ன பயன்தரும்?' என்ற நோக்கில் தான், உலகம் காண முற்பட்டிருக்கிறது. இதை ஆங்கிலத்தில் Utilitarian Philosophy என்று கூறுவார்கள்.

'மனிதனுக்கு இருக்கிற காலம் மிகக் குறைவானது; இந்தக் குறைந்த காலத்திற்குள் இதைத்தான் செய்யவேண்டும்—அதை இப்படிச் செய்யவேண்டும்' என்பதை எளியவர்களுக்கும் விளங்கக்கூடிய வகையிலும், பயன்படக்கூடிய வகையிலும் எடுத்துரைக்கவேண்டும்.

தத்துவ நூல்களிலிருந்து கறக்கவேண்டிய முறைப்படி கருத்துக்களைக் கறந்து, கழனிகளில் பணிபுரியும் உழவர்க்கும், ஆலைகளில் அவதியுறும் தொழிலாளருக்கும், ஆசைக்கும் அச்சத்திற்குமிடையில் ஊசலாடிக்கொண்டிருக்கும் நடுத்தர மக்களுக்கும் பயன்படத்தக்க—புரியத்தக்க வகையில் தரவேண்டியுள்ளது. பசுவினிடத்தில் பால் இருக்கிறது என்றால், பசுவின் உடல் முழுதும் நாம் பாலைத் தேடிச் செல்வதில்லை. கறக்க வேண்டிய இடத்தில் முறைப்படி கறந்தால்தான் பால் கிடைக்கும்—அதனால் பலன் கிடைக்கும். அதைப் போல, தமிழ் இலக்கியங்கள், தத்துவ நூல்களிலிருந்தெல்லாம் கருத்துக்களை முறைப்படி கறந்து தரவேண்டியது, தமிழ்ப் புலவர்களின் வேலையாகும்.

இப்படி, பயன்படத்தக்க வகையில் எல்லாவற்றையுமே நோக்கிப் பயன் படைத்தவர்கள் மேலைநாட்டவர். 18, 19-ஆம் நூற்றாண்டு இறுதியிலேயே அவர்கள், பயன்படுத்தும் நோக்கத்தோடு காரியமாற்றத் துவங்கிவிட்டனர். நாம் இன்னும் அந்தப் பயன்படுத்தும் நோக்கத்தைப் பெறவில்லை.

தேங்காயை நாம் பயன்படுத்துவதற்கும் மாங்காயைப் பயன்படுத்துவதற்கும் வேறுபாடு இல்லையா? தேங்காயில் மேலே உள்ள நாரையும், ஓட்டையும் நீக்கிவிட்டு, உள்ளே உள்ள பண்டத்தைத் தின்கிறோம். மாங்காயில், மேலே பழம்—உள்ளே கொட்டை; பழத்தைத் தின்றுவிட்டுக் கொட்டையை வீசி எறிந்து விடுகிறோம். அதைப் போல, தமிழ் இலக்கியங்களிலும், எதை எதை, எந்த எந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்துவது—எப்படிப் பயன்படுத்துவது என்று முறைமைப்படுத்தி, வரிசைப் படுத்தி—வகைப்படுத்தித்தர வேண்டாமா? அப்படித் தந்தாலன்றி, மக்களிடையே பொது அறிவு வளருவது எப்படி? எவை எளிதாக நல்ல பயன் தரத்தக்கன என்று கருதுகிறார்களோ, அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

பயன் தரத்தக்க நோக்கு வேண்டும் என்பதினால்தான், நாங்கள் சில இலக்கியங்களைத் தாக்கவேண்டியவர்களானோம்; சிலர், அவற்றைத் தாங்கித்தீர வேண்டும் என்று கருதினார்கள்.

இப்படி எங்கள் தாக்குதலுக்கும்—சிலரின் தாங்கித் தீர வேண்டிய நிலைக்கும் இடைப்பட்ட நூல்கள் இருக்கின்றனவே, அவைதான், தமிழருக்குப் பயன் தரும் நூல்கள் என்றுகூறலாம்.

எக்காலத்திலும் பயன்படக்கூடிய நூல்கள் தமிழில் ஏராளம் உண்டு. அவற்றில் எல்லாம் நல்ல புலமை பெற்றிருந்த மறைமலையடிகள், பல்வேறு கருத்துக்களை—தமிழன், தனியானதோர் மாண்புக்கு—பண்புக்குச் சொந்தக்காரன் என்பதை வலியுறுத்தும் கருத்துக்களை—மிக்க துணிவோடு எடுத்துச் சொன்னார்.

தமிழனின் பண்பு தனிச் சிறப்புப் பெற்றது என்பதை மறைமலையடிகள், காரண காரியங்களோடு விளக்கியிருக்கிறார். கருத்துக்களை, பதப்படுத்தி—பக்குவப்படுத்தி ஏடுகள் வாயிலாகத் தந்திருக்கிறார்.

சைவசித்தாந்தக் கழகத்திலுள்ள என் நண்பர் சுப்பையா அவர்கள், மறைமலையடிகள் பெயரால் ஏற்பாடு செய்துள்ள இந்தப் படிப்பகம் மறைமலையடிகளின் கருத்துக்களை அறிந்து தமிழர்கள் நல்ல பயன்பெறுவதற்கு, உபயோகப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஒருகாலத்தில், 'தமிழில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன?' என்று சிலர் கேட்டதுண்டு; ஆனால் இன்றைக்கு ஓர் ஐயாயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்துக்குப் போனால், அத்தனைக்கும் தமிழ்ப்புத்தகங்கள் வாங்கிக்கொண்டு திரும்பமுடியும். அந்த அளவு, தமிழில் இன்று புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன.

சீரிய கருத்துக்களைத் தரும் வண்ண ஏடுகள் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்தன ; ஆனால், இன்று தமிழிலும் இருக்கின்றன. அந்த ஏடுகள் இன்னும் பல வெளிவரவேண்டும்.

நம்முடைய இலக்கியக் கருத்துக்கள் எல்லாம், நல்ல வண்ணங்களோடு ஏராளமாக வெளிவரவேண்டும். வண்ணம் பற்றி நான் வலியுறுத்திச் சொல்வதற்குக் காரணம், இங்கே வண்ணத்தை விரும்பும் வாலிபர்கள் ஏராளமாக இருப்பதினால்தான். என்னதான் நல்ல கருத்துக் கருவூலமானாலும், அதில் வண்ணம் கூட்டப்பட்டால், நம்மையும் அறியாமல் அதனை எடுத்துப் புரட்டிப் பார்க்கத் தூண்டும். புரட்டியதும் சுவைதட்டிவிட்டால், பின் அந்தக் கருத்துக் கருவூலம், வெளிவந்த பயனை எய்திவிடும்.

தமிழ்ப் பெருங்குடி மக்கள், கிடைத்த கருத்துக்களை— பெற்ற கருவூலங்களை எல்லாம் ஒரே பாண்டத்தில் போட்டு வைத்துவிட்டனர். இன்றைக்குள்ள தமிழ்ப் புலவர்கள் அவற்றை எல்லாம் எடுத்து நல்ல கருத்துக்களையும், ஆராய்ச்சிக்கு நிற்கக்கூடியவற்றையும், வெறுங் கற்பனையை மட்டுமே கொண்டவற்றையும், ஒரே பாண்டத்திலிருப்பதைப் பிரித்தெடுத்து, முறைப்படுத்தி வரிசைப்படுத்தித் தரவேண்டும். இதைச் செய்வதற்கு இதுதான் தக்க காலம் என்று நான் கருதுகிறேன்.

குறள் இருக்கிறது; என்னைப் பொறுத்தவரையில், இன்னதைச் செய்யவேண்டும் ; இன்னதைச் செய்தால் நல்லது; இன்னதை இன்னார் செய்தார்கள் என்று அந்த நல்லற நூலில் கருத்துக்கள் பிரிக்கப்பட்டிருப்பதைக் காணுகிறேன். 'இன்னதைச் செய்யுங்கள்' என்று கட்டளையும், 'இன்னதைச் செய்தால் நலம்' என்ற சிபாரிசும் குறளில் இருக்கின்றன. இதுபோல, தமிழ் இலக்கியங்களை எல்லாம் முறைப்படுத்தலாம்.

எனவே, தமிழ் இலக்கியங்களை முறைப்படுத்தி—வகைப்படுத்தித் தரவேண்டிய பொறுப்பு தமிழ்ப் புலவர்களுக்கு இருக்கிறது. அதற்கு இதுவே தக்க காலம்; ஏனென்றால் இப்போது அதற்கான விழிப்புணர்ச்சியும், ஆற்றலும் நிரம்ப இருக்கின்றன.

அந்தக் காரியம் நடைபெற்றால்தான் தமிழின் தொன்மையும், தமிழின் இனிமையும், பெருமையும், தமிழர்களால் சரிவர உணரப்பட முடியும்; தமிழ் இனம், தமிழ்ப் பண்பு, தமிழ் அரசு தழைக்க முடியும்.

இந்த வகைக்குத் திறக்கப்பட்டுள்ள மறைமலையடிகள் நூலகம் பயன்பட வேண்டும் என விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த விழாவில் கலந்துகொள்ளுவதில், நாம், மறைமலை யடிகளிடத்தில் கொண்டுள்ள மதிப்பைத் காட்டிக்கொள்கிறோம் என்பதையும் கூறிமுடிக்கிறேன்.

## திருவாட்டி சவுந்தரம் கைலாசம் அம்மையார் பேச்சு

திருவாட்டி சவுந்தரம் கைலாசம் அம்மையாரவர்கள் அரிய தொரு விரிவுரை இனிமையுற ஆற்றினார்கள். சுருக்கம் வருமாறு:

மறைமலையடிகளை நேரில் ஒரே ஒருமுறை சந்தித்து அவர்கள் ஆசியைப் பெறும் பாக்கியம் பெற்றிருந்தால்கூட அவர் தம் இதயத்தின் வளப்பினை, சிறப்பினைப் பெருமளவு எழுத்தின் மூலம் அறிந்துள்ளேன்.

மறைமலையடிகளை அறியாதவர்கள் இருக்கவே முடியாது. அவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு மறக்கமுடியாததொன்று. பொன் எனப் போற்றும் சங்கப் பூந்தமிழ்ப் பாக்களுக்குப் புத்துரை கண்டவர் அவர். சாகும்வரை தமிழுக்குத் தொண் டாற்றினார். அடிகளின் உடல் எரிந்தபொழுது சாம்பல்கூடத் தமிழ்மணம் வீசியிருக்கும் என்று எண்ணுகிறேன். இன்பத் தமிழால் இதயத்தைக் கவர்வது அவர்தம் எழுத்து மட்டுமல் லாது அவர்தம் இனிய குரலும் காற்றோடு கலந்து மங்கிவிடாது நெஞ்சத்தை விட்டு என்றும் நீங்காது நிற்பது என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

மறைமலையடிகள் இறுதிவரை தமிழுக்குப் போராடியதால் தமிழுலகம் அவரை நன்கறியும். முதுமை, வயதிலே அவருக்கு ஏற்பட்டாலும் தமிழையே உயிராகக் கொண்டதால் புதுமை உள்ளத்திலும் உடம்பிலும் பொங்கி வழிந்தது. தமிழின் சுவையைத் தாம் மட்டும் அனுபவியாது யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று சங்கப்பாக்களின் கனிரசத்தை நூல்களிலே வடித்துத் தந்தவர் அவர். வண்டுகளுக்குத் தம் தேனை வாரியிறைத்த வண்ண மலர்போல விளங்கினார். தோன்றிற் புகழொடு தோன்றுக என்பதற்கு இலக்கியமாய் விளங்கும் மறைமலையடிகள் பெயரில் இன்று நூல் நிலையம் திறக்கப்படு கின்றது.

அடிகள் பத்திமலையின் ஏறு. தமிழர்க்கு வழி காட்டிய கலங்கரை விளக்கம். அவர்கள் நூல்கள் இங்குள்ளன. மக்கள் அன்பு நெறிகாண வேண்டுமெனில் ஆர்வத்துடன் எல்லோரும் கற்க முயலவேண்டும். அன்பு கனிந்த கனிவே சத்தி. தமிழோடு அறிவும் சேர்ந்துவிடுமானால் இன்பம் பெருகும். எல்லோரும் கற்க வேண்டும் கசடற. தோண்டத் தோண்ட நீர் ஊறுவது

போலப் படிக்கப் படிக்க அறிவு பெருகுகின்றது. அறிவு பெருகப் பெருக இன்பமும் அன்பும் பெருகுகின்றது. தூய எண்ணம் கொண்ட வாழ்வு சிறக்க நாம் படிக்கவேண்டும். ஏழ்மையினால் தமிழர்கள் படிக்காதுபோய்விடப் போகின்றனர் என்ற எண்ணத்தில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இந்நூல் நிலையத்தைத் திறந்து வைத்துள்ளார்கள். இதை நான் பாராட்டுகின்றேன்.

## பேராசிரியர் கா. சு. பிள்ளை படத்திறப்பு

டாக்டர். துரையரங்கனாரவர்கள், எம்.ஏ., எம்.எல்., தாகூர் சட்ட விரிவுரையாளர் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் உருவப் படத்தினைத் திறந்து வைத்து உருக்கமான விரிவுரை ஒன்று ஆற்றினார்கள். சுருக்கம் வருமாறு:

எதிர்பாராத ஒருவர் படத்தை எதிர்பாராத ஒருவன் திறந்து வைக்கிறேன்.

ஒரு மாணவன் பி. ஏ. பட்டம் பெற்றபின் நல்ல ஊதியம் தரும் வேலையில் அமர்கிறான். உறுப்பு நலமனைத்தும் வாய்ந்த மங்கை யொருத்தியை மணக்க வேண்டுமென்று எண்ணுகின்றான். எண்ணியவாறே அடைந்து இல்லறத்தை நல்லறமாக நடத்துகின்றான். எண்ணியவாறு அடைவதற்கு அவன் இடைவிடாது முயன்றான். வெற்றி பெற்றான். அவ்வாறே கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களும் எண்ணியதை எண்ணியாங்கு முடிக்க இடைவிடாது முயற்சி செய்வதில் தளராதவர்.

மக்கள் என்னதான் படித்தாலும் பயனில்லை. உட்கார்ந்து சிந்திக்கவேண்டும். படித்தபின் அமைதியுடன் ஆராய வேண்டும். மனத்தை ஒழுங்குபடுத்துவதற்கு முன்னோர்கள் சமயத்தைப் பயன்படுத்தினார்கள். சமயம் அமைதியுடன் ஒழுங்கு நெறியையும் தவறாமல் மக்களுக்கு அளித்தது. கா. சு. பிள்ளையவர்கள் ஆங்கிலக் கல்வி சிறப்பான முறையிலே கற்றவர். சென்னைச் சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்புப் படித்தவர்கள். தாகூர் சட்டப் பரிசு பெற்ற முதல் தமிழர் அவர். எனினும் அவர் சமயத்தை என்றுமே கைவிட்டது கிடையாது. தம்முடைய வாழ்க்கையிலே அமைதியை ஏற்படுத்திக்கொள்ளச் சமயத்தைக் கடைப்பிடித்தவர். அவருடைய தந்தையும் சிவநெறி தவறாத செல்வர். கா. சு. பிள்ளை அவர்கள் மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தையும் தாயுமானவரையும் தலைமேல் வைத்துப் போற்றினார்கள். 'தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும்' என்ற நூல் ஒன்றும் எழுதியுள்ளார்கள். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் அதை வெளியிட்டுள்ளனர்.

## திரு. வ. திருவரங்கனார் படத்திறப்பு

உயர்திரு. கா. அப்பாத்துரைப் பிள்ளை எம்.ஏ.,எல்.டி., அவர்கள் கழக அமைச்சர் வ. திருவரங்கனார் அவர்கள் உருவப் படத்தினைத் திறந்து வைத்து ஆர்வமிக்க சொற்பொழிவொன்று ஆற்றினார்கள். சுருக்கம் வருமாறு :

திரு. வ. திருவரங்கனார் படத்தைத் திறந்து வைக்க நான் முன்வந்துள்ளேன். சடங்கு, சம்பிரதாயம் போன்ற எல்லாவற்றிற்கும் அகப்பண்பு, புறப்பண்பு என்ற இரண்டு உண்டு. இங்குள்ள படங்களனைத்தும் அறிஞர்களுடைய படங்கள். திறந்து வைத்தவர்கள் அனைவரும் அறிஞர்கள். சிலர் அகத்தையும் கொண்டார்கள். சிலர் புறத்தையும் கொண்டார்கள். திருவரங்கனார் செயல் வீரர். அவர்கள் இல்லையானால் மறைமலையடிகளே இல்லையென்று கூறலாம். தமிழ்ச் சமுதாயத்தை அமைக்கச் செங்கற்கள்போல் அறிஞர்கள் அமைந்திருந்தனர். ஆனால் பச்சைச் செங்கல்லும் சுட்ட செங்கல்லும் ஒன்று சேராததுபோல தமிழறிஞர்கள் தம்முள் மனவேறுபாடு கொண்டிருந்தனர். தமிழ் மக்களையும் அறிஞர்களையும் இணைத்துக் கூரை, சுவர்கள், தாழ்ப்பாள், பூட்டு இவை நன்றாக அமைந்த வீடுபோல், நல்ல சமுதாயமொன்றை உருவாக்கினார் திருவரங்கனார்.

தமிழன் பிறரைப் பற்றியே என்றும் சிந்தித்துக்கொண்டிருந்தால் போதாது. அவன் தன்னைப் பற்றியும் எண்ண வேண்டும். பிறரைப் பற்றியும் சிந்திக்கவேண்டும். இந்த இரண்டு மனப்பான்மைகளும் தமிழர்க்கு வேண்டும். இரண்டுக்கும் நடுநிலை ஏற்படுத்தியவர் திருவரங்கனார் அவர்கள்.

பேரறிஞர்கள் முற்காலத்திலே இருந்தார்கள். பலர் இருக்கின்றனர்; இன்னும் தோன்றுவார்கள். அவர்கள் அனைவரும் நல்வாழ்க்கை வாழச் சிறப்புற்ற வகையில் உதவியில்லை. திருவரங்கனார் போன்ற செயல் வீரர்கள் பலர் பல காலத்தில் இல்லாத காரணத்தினால் பெரும் பெரும் தமிழறிஞர்களுடைய புகழ் மங்கி விட்டது. திருவரங்கனார் அவர்கள் மறைமலையடிகள் பல்லாவரத்தில் பொருள் முட்டுப்பாட்டினால் சோர்வுற்றிருந்தபொழுது அவரை இலங்கைக்கு வரவழைத்து விரிவுரைகளாற்றச் செய்து பொருள் திரட்டிக்கொடுத்து உதவி செய்தார்கள். அவர் திராவிட மொழி ஐந்தினையும் போற்றி வளர்க்க எண்ணினார். 1930-32-இல் திராவிடம் என்ற வார இதழை நிறுவ எண்ணினார். திருவரங்கனாரைப் போலவே இன்று அவருடைய தம்பியாரான வ. சுப்பையா பல தமிழறிஞர்களைப் போற்றி வருகின்றனர்.

தலைவரவர்களின் முடிப்புரை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையில் நன்றாகவும் தெளிவாகவும் ஆற்றப் பெற்றது.

## திரு. வ. சு. அவர்கள் நிகழ்த்திய நன்றியுரை

தலைவரவர்களே, அன்பர்களே!

இங்கே ஐந்துபெரியோர்களின் படங்கள் திறந்துவைக்கப் பெற்றன. அவை ஒரு தொடர்புபற்றியே நிகழ்ந்தன. மறை மலையடிகளின் சமயகுரவர் சோமசுந்தர நாயகர். மறைமலை யடிகள் சோமசுந்தர நாயகரைப் பற்றிப் பேச ஆரம்பித்தவுட னேயே அவர் கண்களில் நீர் தேங்கிவழிந்துவிடும். அவரைத் தம் தந்தையாகப் பாவித்தார். அவருடைய வரலாற்றைக்கூட நூலாக எழுதியுள்ளார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அடிக ளாரின் அறிவுத் திறனைப் பாராட்டி நற்சான்றிதழளித்துக் கிறித்துவக் கல்லூரியில் வேலை வாங்கித் தந்தார். அடிகளாரைத் திருவனந்தபுரத்திற்கு அழைத்துப் பாராட்டி அவர்களின் விளக் கத்துக்கு உதவியவர்.

என் தமையனார் மறைமலையடிகளுக்குப் பெருமுதவி செய் துள்ளார்கள். அடிகள் ஒவ்வொரு நூலிலும் 200 அல்லது 300 படிகள்தான் அச்சிடுவார். அவை அனைத்தையும் என் தமையனார் விற்றுக்கொடுப்பார். தமையனார் அப்பொழுது இலங்கையில் இருந்தமையால் அடிகளாரை இலங்கைக்கு வரவழைத்துச் சொற் பொழிவுகள் ஆற்றச்செய்து பொருள் திரட்டித் தந்தார். வணிக ரிடம் நிலையாக திங்கள்தோறும் பொருள்பெற்றுத் தந்தார். தமிழ்நாடு அடிகளாரை நன்கு உணர்ந்து போற்றாத காலம். தமையனார்தான் உணர்ந்து போற்றினார். என் தமையனார் அடிக ளாரின் மருமகனாராவர்.

அடுத்துத் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் கொள்கை வழிநின்றே கழகம் நூல்களை வெளியிட்டு வருகின்றது. கழகம் எத்தனையோ வழிகளில் சிறந்து விளங்குகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்போது அரிய கருத்துக்களைக் கழகம் வாரிவாரித் தந்தது. இப்பொழுதுள்ள தமிழ்க்கொடியைக் கழகந்தான் தோற்றுவித்தது.

மறைமலையடிகள் ஏறக்குறைய நாலாயிரம் நூல்களைத் தொகுத்து வைத்துள்ளார்கள். அவை முழுவதும் அவர் கையா லேயே உறையிட்டுவைக்கப்பட்டுள்ளன. அவர் எந்த ஒரு நூலை யும் படிக்குமுன் பேழையில் வைப்பதில்லை. இன்ன கருத்தை இன்ன நூலில் இந்த இடத்தில் படித்தோம் என்று அவர்கள்

நினைவில் வைத்திருப்பார்கள். சொற்பொழிவாற்றும்போதும் முடிவுரையில் தாம் பேசிய கருத்தனைத்தையும் தொகுத்துக் கூறுவார்கள். அது கேட்க இனிமையாயிருக்கும். அவர்களுடைய குரலும் கீச்சுக்குரல். மிக இனிமையாகவிருக்கும்.

இக் கட்டடத்தை வாங்கிய பின்னர் இதைச் சீர்திருத்துவதற்கு உதவிய நகராமைப்பதிகாரி திரு. டி. வி. சபாபதி அவர்களுக்கும் அவருக்கு உதவியாக இருந்து நமக்கு உதவிய கட்டடக் கலைவல்ல திரு. செல்லையா அவர்களுக்கும் என் நன்றி. மற்றும் முகப்பு வாயிலையும் நடராசர் உருவச் சிலையையும் உருவாக்கித் தந்தவர்களுக்கும் என் நன்றி.

இக் கூட்டத்தைத் தலைமை தாங்கிச் சிறப்பித்த திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களுக்கும், இதிற் கலந்து சொற்பொழிவாற்றிய அறிஞர்கள் அனைவருக்கும் என் நன்றி. இவ் விழாவைச் சிறப்புற நடத்தித் தந்த உங்களுக்கும் நன்றி. வணக்கம்!

சென்னை வானொலி நிலையத்தார் காலை முதல் வந்திருந்து ஒலிப்பதிவு செய்தனர். அப்பதிவினை இரவு 9¾-10½ மணிக்கு ஒலிபரப்பினர். இங்ஙனம் ஒலிபரப்பிச் சிறப்பாகத் தமிழகத்திற்கும் பொதுவாக வெளியுலகங்கட்கும் இந்நிகழ்ச்சியினை அறிவித்துதவிய வானொலி நிலையத்தார் தொண்டு நனிமிகப் பாராட்டற்குரிய தொன்றாம். அந்நிலையத்தார்க்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

நிழலுருவப் படப்பிடிப்பினர் பலர் அவ்வப்போது இன்றியமையாத இடங்களினெல்லாம் பல்வேறு நிலைகளினின்று படம் பிடித்தனர். அவற்றுட்சில இச் செல்வியின்கண் வந்துள்ளன காண்க.

தேவார இசைப்புலவர், திரு. சாரங்கபாணிச் செட்டியாரவர்கள் கடவுள் வாழ்த்து ஓதக் கூட்டம் இரவு ஒன்பது மணிக்கு இனிது நிறைவுற்றது.

---

கற்றபெருங் கல்வியினைக் காத்து வளர்ப்பிக்கும்
உற்றகளம் நூல்நிலையம் ஓர்ந்துணர்வு—பெற்ற
அடிகள் மறைமலையார் நூலகம் வாழி
படியில் பயனெடுபல் லூழ்.

சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை.

---

# மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழா

# வாழ்த்துப்பாக்கள்

மாண்பு மறைமலையார் நூல்நிலையம் மாண்புடனே
காண்பரிய காட்சியுடன் கண்டனரால்—மீண்டுதமிழ்
அம்மை தனிச்சிறப்பை ஆய்ந்துலகம் உய்ந்திடவே
நம்பெருமைச் சுப்பையவேள் நாடு.

—இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்.

நித்தம் சிவபூசை நேர்மையுடன் ஆற்றிநனி
சித்தம் சிவமாக்கிச் சேர்ந்திட்ட—பத்தர்
மறைமலைநன் மாதவத்தோர் பேர்புனைந்த ஓர்நூல்
நிறைநிலையம் தோன்றியதே நேர்.

—திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம்,
பி.ஏ., பி.எல்.,

.... .... .... .... ....
மக்களின் அறிவு வளர்ச்சி நிலையமாய்த்
தக்கநூ லனைத்தும் தகவொடு தந்து
மிக்கநற் புகழினை மேவியிப் பூவில்
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய்
வளர்ந்திட இறைவன் மாணருள் செய்க!

—கோம்பை. அ. சுருளியாண்டிப்பாவலர்.

.... ... .... .... ....
மறைமலை அடிகளார் மாண்புறு பெயரால்
நிறுவிடும் நூலகம் நெடும்பய னளித்து
மதுரை வையை மணலினும்
வாழி வாழி வளமுற வாழியே!

—மதுரை, பேராசிரியர். அ. கி. பரந்தாமனூர்.

ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
பூரியர்தம் நாத்தடிப்பைப் போக்கிய—சீரியநற்
சான்றோர் வழிவந்த தண்டமிழ்நற் றொண்டினையே
ஈன்றோர் நிலையி லிருந்தாற்றி—வான்றோய்ந்து
வந்தவிசை மேய மறைமலை நூல்நிலையம்
எந்தமிழ்போல் வாழ்க வினிது.

—பவானி, புலவர் குழந்தை.

அருளார் மறைமலைப்பே ரண்ணல் தொகுத்த
பொருளார்நூன் மன்றத்திற் புக்குத்—தெருளாரும்
நூல்கள் தமையாய்ந்து நுண்ணறிவு பெற்றறிஞர்
சால்புடனே வாழ்க தழைத்து.

—வியாசர்பாடி, சுவாமி முக்தானந்தா

மறைமலை யடிகள் மனமென வவர்தம்
குறைவில்நூல் நிலையம் குவலய மதனில்
குறைவற நிலவக் குகனடி வணங்கி
நிறைவுறு கெனவே நினைமன மினிதே.

—மயிலம், வித்துவான், ஆ. சிவலிங்கனார்.

திருவார் மறைமலைச் சீரிய அடிகள்
உருவார் கலைநூல் உளவாம் நிலையம்
கலையறி வதனில் நிலைபெறும் உளத்தினர்க்
கரும்பய னுதவியிவ் வாழிசூழ் உலகில்
என்றுஞ் சிறப்புடன் இனிது மிளிர்ந்திடக்
குன்றுதோ றாடும் குமரவேள் அருள
நன்றவன் அடியை நனிவணங் குதுமே.

—கருப்பக்கிளர், சு. அ. இராமசாமிப்புலவர்.

வடமொழியும் ஆங்கிலமும் வண்டமிழும்
தேர்ந்துதமிழ் வளமார் தூய
நடையெழுதிச் சிவநெறிகொள் நல்லமறை
மலையடிகள் நாளுந் தேர்ந்தே
உடலுயிராய்ப் பேணியுளம் ஒப்பித்த
நூல்களெலாம் ஒருங்கே தேர்ந்து
மடமகல நூல்நிலையம் அமைத்த செ(ல்)லைக்
கழகத்தார் மன்னி வாழி!

—கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள்.

உறைமலைப் பேரிமயம் உறை உத்தமன் செஞ்சடையான்
நிறையருள் பெற்றொளிரும் சைவம் நீடுசித் தாந்தமெனும்
முறைவளர் நற்கழகம் முந்து முத்தமி ழால்வளர்க்கும்
மறைமலை நூல்கமே மன்னி வாழிய நீடுழி!

—உதகை, நாவலர்மணி, நாராயண பாரதி.

ஆங்கிலமும் பைந்தமிழும் ஆரியமும் பன்மொழியும்
பாங்குறவே கற்றுணர்ந்த பைந்தமிழன்—ஓங்கு
மறைமலையின் நூல்நிலையம் மக்களுக்குத் தந்தார்
நிறைந்ததமிழ் வாழ நினைந்து.

—காரைக்குடி, வித்துவான், பெரியகருப்பன், பி.எ.

... .... .... .... ....

அன்னார் பெயரால் அழகொழுக நின்றிலங்கும்
நன்னூல் நிலையத்தால் நற்றமிழர்—தன்னேரில்
தொண்டு பலசெய்க தோலாத் தமிழ்நெறியை
எண்டிசைக்கும் காட்டி இனிது.

—நெல்லை, பொ. முத்தரசு, பி.ஏ., எல்.டி.,

செந்தமிழ் தனக்கு மறைமலை யடிகள்
செய்பெரும் பணிகளை எல்லாம்
இந்தநல் லுலகி லுள்ளபே ரறிஞர்
என்றுமே மறந்திடா வண்ணம்
அந்தமாய் அவர்செய் நூல்களை எல்லாம்
நிலையமாய் அமைத்தமை கேட்டுச்
சிந்தையே மகிழ்ந்தோம் அப்பெரு நிலையம்
செழிப்புடன் நீடுவாழ் குகவே.

—அடையாறு, வடிவேல் முதலியார் தமிழ்ப்பண்டிதர்.

மன்னு மறைமலையாம் மங்காப் புகழ்விளக்காம்
நன்று தமிழன்னை நன்மகவாம்—பன்னல்சால்
அண்ணல் பெயரா னமையவெழும் நூலகந்தான்
வண்மையெலாம் பெற்றுவாழ் க!

—திருவாரூர், கி. சண்முகம், தமிழாசிரியர்.

மால் நிலைக்கும் மனத்தினரை மாண்புறுநல்
மனத்தினராய் மருவச் செய்யும்
நூல் நிலையத் தின்பெருமை தனையுணர்ந்து
மறைமலைவேள் நுவல்நூல் யாவும்
மேல் நிலையத் தினுக்குவழி காட்டுமெனத்
துவக்கிவைத்தார் மேலோர் கொள்சீர்
போல் நிலையம் வாழ்ந்திடுக அறிஞர்செயல்
ஓங்கிநிதம் பொலிந்து வாழி!

—விழுப்புரம், புலவர், நா. ஆறுமுகம்.

உவந்துவந் தொப்பில் கேள்வி
யுணர்கலைப் பெருமான் உற்ற
தவந்தரு பயனாய் வந்த
தனித்தமிழ் மூலம் போற்றிச்
சிவந்திகழ் உலக முய்யச்
செந்தமிழ்ச் சித்தாந் தப்பேர்
நவந்திகழ் கழகம் நல்கும்
வண்மைநல் நலமே வாழி!

—சேந்தை, ரா. மாணிக்கவாசகன்.

மும்மொழியும் மும்மதமும் மூதறிவும் வீறுபெறப்
பம்பியுயர் ஞாயிறெனப் பல்காலும்—நம்புபவர்க்
காசான் மறைமலையாம் அன்புருவி னம்மடிகள்
மாசிலருள் செய்திடுக மற்று.

—திருப்பதி, கோ. பாலசுந்தர நாயகர், எம்.ஏ.,

மறைமலை யடிகள் பேரால்
மன்னுநூ லகம்எந் நாளும்
மறைமலை யடிகள் எண்ணம்
மாநில மீது பூக்க
வரையறை யில்லா நூல்கள்
வகைவகை யாகக் கொண்டே
இறையரு ளதனால் நன்றே
இனிதுநீ டூழி வாழ்க!''

—வெண்பாவூர், பொ. திருஞானம்.

தலைவணங்காத் தமிழ்த்திறமும் தனிக்கொள்கை
வீறுமுயர் சான்றாண் மையும்
அலையலையாய்ப் புதுக்கருத்தும் அறிவுவளர்
பெருஞ்சிறப்பும் அடுக்கல் போல
நிலைகுலையா நேர்மையொடு பிறநாடும்
நினையும்வணம் நிகழ்த்தும் தெய்வ
மலையென்னு மறைமலையார் நூல்நிலையம்
பேருலகில் வாழ்க நன்றே.

—பட்டுக்கோட்டை, புலவர், க. சுப்பிரமணியம்.

மறைமலைச் செம்மல் மனமகிழ் பன்னூல்
நிறைதமிழ் நல்குக நின்று.

—நாகைத் தமிழ்ச் சங்கத்தார்.

.... .... .... .... ....
உவகையிற் சென்னை உயர்நக ரத்தே
மறைமலை யடிகள் மாநூல் நிலையம்
நிறுவிய செயலை நினைந்து
உறுமகிழ் வெய்துவன்; ஓங்குக நிலையமே!

—திருத்தங்கல், வித்துவான், பெ. கோவிந்தன்.

முப்பொருளும் மேதினியில் தான்விளங்கித் தோன்றுமே
முப்பொருள் வல்ல மறைமலையார் நாமத்தால்
செப்பிய செந்தமிழ் நூல்நிலையம் நாளுமே
ஒப்பிலா முத்துப்போல் ஊங்கு.

—குன்னூர், புலவர், த. தமிழ்மணி.

மறைமலையார் நூலகந்தான் மன்றுள்நட மாடும்
மறைமலையான் தண்ணருளால் மாண்பு—நிறைவுடைய
நூலால் தமிழர் நுவலும் சிறப்பற்று
மேலாக வாழ்ந்திடுக வே.
—திருவாரூர், புலவர், க. மீனுட்சிசுந்தரம்.

மங்கலமார் மேலோன் மறைமலைவேள் நூல்நிலயம்
துங்கமுடன் வாழ்ந்திடுக தொல்லுலகில்—தங்கிநிதம்
கற்றுணர்வோர் வாழ்க! கவிஞர் குழுவினர்கள்
எற்றைக்கும் வாழ்க இயைந்து.
—திருவாமாத்தூர், வித்துவான், தி. மு. சங்கரலிங்கம்.

தமிழ்கூறு நல்லுலகில் தனிப்பெரும் புலவனும்
அமிழ்தூறு நூல்கள்பல ஆக்கிய செம்மலாம்
மறைமலை யடிகளின் மாண்புறு நூல்களைத்
திறமையுறத் தொகுத் திலங்கு நூல்நிலயத்
திறப்பு விழாவிலே தேர்ந்த நல்லறிஞர்
சொற்கேட் டுவக்கச் சுப்பையா ஆற்றும்
நற்செயல் கண்டு நானிலம் வியக்குமே.
—மாயூரம், வித்துவான், எஸ். குஞ்சிதபாதம்.

வாழ்க மறைமலைப்பேர், மன்னும் அடிகள்புகழ்
வாழ்க அவர்தொகுத்து வைத்ததமிழ் நூல்நியம்!
வாழ்க தமிழ்மொழிக்கு வாய்த்ததொண்டு செய்யுமவர்
வாழ்க தமிழ்நாடு! வாழ்க தமிழ்மொழியே.
—திருவாமாத்தூர், தி. செ. முருகதாச பிள்ளை.

மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா

தண்டமிழின் சுவைநூலும் தகுசைவத் துறைநூலும்
குண்டுகடல் கடந்துநிதி கொழிக்கவரு மாங்கிலமும்
வடமொழியின் அருநூலும் வகையுறவே இனிதுணர்ந்த
கெடலருஞ்சீர் மறைமலையே கேழ்கிளரும் ஒளிநிலையே
தமிழுலகம் புரிதவத்தால் தழைத்தவொரு பயன்மரம்போல்
அமிழ்தனைய தமிழ்நூலாம் அருங்கனிகள் அளித்தனையால்

இஃது ஆறடித் தரவு

தாய்மொழியில் அரியபல தகவுடைய நூல்களுக்கும்
ஆய்வுரைகள் வகுத்திட்டே அறியாமை களைந்தனையால்
பொங்கோத முண்டதமிழ் பொலிவுறவே பலவுரைநூல்
மங்காத மதிநலத்தால் மாண்புறவே இயற்றினையால்
சைவத்தின் நிலைதழைக்கச் சித்தாந்த வுரைநூல்கள்
மெய்வைத்த விரிவுரைகள் மிகப்பலவே செய்தனையால்

இவை மூன்றும் தாழிசை

ஆங்கதனால்,

இது தனிச் சொல்

தமிழ்நூல்கள் புரந்தோய் நீ
தண்டமிழைக் காத்தோய் நீ
அருஞ்சைவம் வளர்த்தோய் நீ
அருளுள்ளம் படைத்தோய் நீ

இவை முச்சீரோரடி நான்கம் போதரங்கம்

அன்பு நீ தமிழும் நீ
அருளு நீ தவமு நீ.
புகழு நீ அமிழ்து நீ
புனித நீ அறிவு நீ

இவை இருசீரோரடி எட்டம் போதரங்கம்

அதனால்,

இது தனிச்சொல்

நின்பெயர் கொண்டு நிலவுநூல் நிலையம்
பன்னெடுங் காலம் பயனுற
மன்பதை யுலகில் மன்னிவா ழியரோ

இது சுரிதகம்.

—ஆடுதுறை, புலவர், சு. வடிவேலன்.

(வெண்டாழிசைக் கண்ணிகள்)

சீராருந் தமிழ்நாடாம் சென்னையிலே மறைமலையார்
பேராரும் நூல்நிலையம் பீடுபெறத் திறந்திடுநாள்
ஆயிரத்துத் தொளாயிரத்தைம் பத்தெட்டில் ஆகஸ்டு
ஞாயிற்று நான்கதிலே நல்லதுலா லக்கினத்தில்
சென்னைதனி லணிலிங்கிச் செட்டிதெரு நூற்றைந்தாம்
எண்ணுள்ள கட்டிடத்தில் எழிற்சென்னை மாநிலத்தை
மேலாக ஆளுநரீம் விட்ணுராம் மேதியென்ற
பாலான மனம்படைத்த பண்புடையார் தலைமையிலே
வாணிசங்கீ தத்தில்எம்.எல். வசந்தகு மாரியென்பாள்
வாணிதனைப் போற்கடவுள் வாழ்த்திசையாற் பாடிடவே
உத்தமராம் உயர்சென்னை உள்நாட்டின் நல்லமைச்சர்
பக்தவத் சலம்நிலையம் பரிவுடனே திறந்திடவும்
சுந்தரஞ்சேர் செயலாளர் சுப்பையா பிள்ளையவர்

வந்தவரை முகமலர்ந்து வரவேற்றே உபசரிக்க
இந்தியா வெளிநாடும் ஏற்றுயர் நூல் நிலையமதைச்
சந்ததமுங் கலைவளரத் தக்கபணி செய்வதனை
ஆய்ந்தபத்ம ஸ்ரீ.எஸ்.ஆர். அரங்கநாதர் நாமமுள்ளார்
வாய்ந்தமொழி யால்விளக்கி மழைபோல எடுத்துரைக்க
அன்றையத் தினம்மாலை ஆறுமணி நேரமதில்
மன்றதனி லேசச்சி தானந்தம் பிள்ளையவர்
திருமலிந்த மறைமலையார் திருவுருவப் படந்திறந்தே
பெருமழைபோற் சொன்மழையைப் பெய்தவையை மகிழ் [விக்க
நற்சோம சுந்தரப்பேர் நாயகரின் படந்திறந்தே
சொற்பொழிவு தூயதமிழ் இளவழ கனார்பொழிய
பேரார்பே ராசிரியர் சுந்தரம் பிள்ளைபடம்
சீரார்கு. கோதண்ட பாணிபிள்ளை திறந்திடவும்
திருக்கழக அமைச்சர்வ. திருவரங்க னார்படத்தை
அருமைப்பன் மொழிப்புலவர் அப்பாத் துரைதிறக்க
விண்புகழ்தா கூர்ச்சட்ட விரிவுரையார் கா.சுப்ர
மண்யபிள்ளை படம்டாக்டர் துரையரங்க னார்திறக்க
மங்களஞ்சேர் மறைமலையார் மாண்பதனை வக்கீல்டி.
செங்கல்வ ராயனொடு செந்தமிழிற் சீர்மிகுத்த
தவமணி திருவாட்டி சவுந்திரம் கைலாசம்
அவனிபுகழ் அறிஞர்அண்ணாத் துரையிவர்கள்எடுத்துரைக்க
இத்துணைபேர் குழுமிடவும் பேசிடவும் ஈடில்லாச்
சுத்தமனச் சுப்பையா பிள்ளைசெய்த பணியாமே
ஆங்கிலமுஞ் ஆரியமும் தமிழும்நா லாயிரநூல்
தாங்கிநிற்கும் நூல்நிலையம் தமிழருக்கோர் களஞ்சியமே
கழகமதில் பதிப்பித்த கதிர்போ லாயிரநூல்
அழகுபெருந் தமிழருக்கோர் அரியகலைப் பொக்கிசமே
மாண்பான நூல்களைநன் மாணவர்கள் கற்றுணர்ந்தே
ஆண்சிங்கம் போல்நடக்க அன்னவரை வாழ்த்துதுமே
மறைமலையார் படமுதலா மற்றவர்கள் படந்திறந்தே
திறம்படவே சொற்பொழிவு செய்தோர்கள் வாழியவே
நிறைமனமும் அறநெறியும் நியமமதில் தவறாத
மறைமலையார் புகழ்மேரு மலைபோல வாழியவே.

—திருவையாறு, சித்திரகவிச்சரபம், பி. வி. அப்துல்கபூர் சாஹிப்.

## நேரிசை யாசிரியப்பா

மறையுரு வன்ன மறைமலை யடிகள்
மாண்பெய ரிலங்க மாநிலந் தன்னிற்
சீர்பெரு நகராஞ் சென்னை யம்பதியில்
மம்மர் அறுக்கும் மருந்தெனுங் கல்வி

அறிவினை யளிக்க ஆருயி ருலகிற்
கெழிற்பெரு நூல்நிலை யந்தனை யினிதே
சான்றோர் நிறைதென் னிந்திய சைவசித்
தாந்தநற் சங்கந் தகைபெற நின்றே
வியனலம் விளக்கும் விளம்பியாண் டுற்ற
ஆவணித் திங்களாம் நாளெட் டதனில்
அமைத்ததாம் அம்ம! அவ் வடிகளார் பெயரில்
சென்னை மன்பதை சீருடன் ஆளுநர்
வீறுசால் ஆண்டகை விட்ணுராம் மேதி
பெயரிய பேரிறை பெட்புடன் தலைமை
தலமது வியக்கத் தந்துமே நிற்க
உண்ணாட் டமைச்சர் பக்தவத் சலமே
நுவலவே யொண்ணு நூல்நிலை யந்தனை
நல்லிசைப் பல்லியம் நலமுடன் ஆர்க்கச்
சான்றோர் வாழ்த்தொலி சால்புடன் தழைக்கத்
திறந்துவைத் தனனே! சென்னைமா நகரில்
அதனால்;
உலகமுள் ளளவும் ஊழி யூழியாய்
ஓங்கல்போல் நாளும் ஓங்கியே வளர,
பிறைதனைச் சூடும் பிஞ்ஞக அண்ணல்
அடிமல ரதனைக் கரமலர் குவித்து
தமிழ்மணம் நாளும் ஒளிர்கென
வணங்கி! வாழ்த்துதும்!! வளமுற யாமே!!!

—குன்னூர், வித்துவான், வெ. சீனிவாசப் பிள்ளை.

மறைமலை யடிகள் நூல்நிலை யவிழா
அழைப்பிதழ் கண்டேன் அகமகிழ் கொண்டேன்
மறைமலை யடிகளார் மாண்புடைப் பெரியவர்
அறிவில் வல்லவர் ஆற்றலில் நல்லவர்
எழுதிய நூல்கள் எல்லாம் தித்திக்கும்
தேனும்வாழ்வின் அமுதாம் அடிகள் நினைவில்
அறிஞரும் மேதையுமாம் "விட்ணுராம் மேதியார்"
விழாவிற் றலைமையும் திறம்பல கொண்டு
அறம்பல காக்கும் அமைச்சர் அறிஞர்
பக்தவத் சலனார் திறந்து வைக்கவும்
அறிஞர் பலரும் ஆற்றும் நல்லுரைப்
பெருவிழா; வளரும் அறிவின் திருவிழா!
இனிதே நடக்க இதயங் கனிந்த
எனது வாழ்த்து!

—புதுக்கோட்டை, குமாரி. எஸ். பிருந்தாதேவி.

# வாழ்த்துரைகள்

மறைமலை அடிகளார் தமிழ்மொழிக்குச் செய்த பணிகள் பல. அவருடைய அரிய ஆராய்ச்சி நூல்கள் செந்தமிழ்த் திறத்தைச் சிறக்கக் காட்டுகின்றன. தெய்வத் தமிழிலக்கியங் கட்கு நல்ல ஆராய்ச்சி நூல்கள் எழுதித் தமிழுலகிற்கு அளித் துள்ளார். தமிழ் கூறும் நல்லுலகம் அடிகளார்க்குக் கடமைப் பட்டுள்ளது. அவர் பெயரால் திறக்கப்பெறும் இந்நூல் நிலையம் அவர் ஆராய்ச்சிக்குத் துணை நூல்களாக உள்ளவற்றைப் பெற் றிருப்பது சிறப்புடைத்து. அதன் திறப்புவிழா செந்தமிழ்ச் சொக்கர் திருவருளால் சிறப்புறுக.

—தருமபுரம், திருப்பெருந் திரு. சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மறைமலையடிகளார் நூல் நிலையம் 24-8-58-இல் உள்நாட்டு அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் பி.ஏ., பி.எல். அவர்கள் திறக்கப்படுவதும், அவ் விழாவிற்குச் சென்னை ஆளுநர் மேதகு, விட்ணுராம் மேதி அவர்கள் தலைமை தாங்குவதும் ஆன செய்தி அறிந்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இவ்விழா வெற்றிகரமாக நடைபெறவும், மறைமலையடிகளார் நினைவாக எழும் நூல் நிலையம் வாழவும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—மதுரை, திருப்பெருந்திரு. ஞானசம்பந்த தேசிகர்.

மறைமலையடிகள் நூல் நிலையத் திறப்புவிழா நன்கு நடை பெறுவதாக. அறிவு நூல்களின் பெரும் பயனை நன்கு அறிந் தவர் அடிகளார். ஆங்கில நூல்களையும் தமிழ்நூல்களையும் பயின்று பயின்று அவர் பெற்ற புலமையும் தெளிவும் அவர்தம் எழுத்துக்களில் மிளிர்கின்றன. அடிகளாரின் நெறியைப் போற்றி உணர்ந்து அறிவுச் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டு இளைஞர் பலர் பயன்பெறுவதற்கு இந் நூல் நிலையம் உறு துணையாகுக.

—டாக்டர். மு. வரதராசன், எம்.ஏ., பி.எச்.டி.

விழா இனிது நிறைவேற இறைவனை வழுத்துகின்றேன்.

மறைமலையடிகள் நூல் நிலையம் தமிழ் மக்கட்குப் பெரிய தொரு கருவூலமாகப் பன்னெடுங்காலம் இருந்து பயன் தரும் என்னும் நம்பிக்கை உடையேன்.

—டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார், எம்.ஏ., எம்.எல். சி.

மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்புவிழா அழைப்பிதழ் இன்று கைவரப் பெற்றேன். தமிழ் மொழிக்கும், இலக்கியத் திற்கும், மக்களுக்கும் நற்றொண்டு ஆற்றிய பெருமக்களுள் என்றும் போற்றப்படுதற்குரிய சிறப்பு எய்தியவர் மறைமலை அடிகளாவர். அவர்கள் தொகுத்து வைத்திருந்த நூல்களுடன் கழகம் சேர்த்துள்ள நூல்களையும் மறைமலையடிகள் நூல்நிலையத் தில் காணப்பெறுதல் இயலும் எனும் செய்தி தமிழ்மக்களுக்கு இன்பந்தரும் நற்செய்தியாகும். சிறந்த நூல் நிலையங்கள் பல தேவையாக உள்ள இக் காலத்தில் மறைமலையடிகள் நூல்நிலையம் பலர்க்கும் பயன்பட்டு விளங்கும் என்பதில் ஐயம் இல்லை. மற்றவர்கள் என்றும் அடிகளாரைப் போற்றிக்கொள்ள அமையும் இந் நூல்நிலையம், மேலும் மேலும் வளர்ந்து சிறக்கவேண்டும். இந் நூல்நிலையம் சிறந்த ஆராய்ச்சி பல செய்தற்கு உதவியாகித் தமிழ்மொழியின் அருமையினையும், தமிழ் இலக்கியத்தின் பெருமையினையும் தமிழ் அறிந்தவரேயன்றிப் பிற மொழி வல்லாரும் அறிந்துணர வாய்ப்பளிக்கும் என நம்புகிறேன்.

—சிங்கப்பூர், பேராசிரியர், மு. இராசாக்கண்ணனூர்.

அடிகளும் சுந்தரம்பிள்ளையவர்களும் ஆராய்ச்சித் துறையில் எனக்கு வழிகாட்டியாக விளங்குபவர்கள். செய்வனவற்றைத் திருந்தச் செய்தவர்கள். அவர்கள் கட்டுரைகளும் நூற்களும் அவர்கள் மறைந்தும் மறையாமல் தமிழகத்தில் உலவிவருவதே அதற்குச் சான்று.

—திருவனந்தபுரம், வி. ஐ. சுப்பிரமணியம், எம்.ஏ., பி.எச்.டி.,

இன்று மாலை தவிர்க்கமுடியாத ஒரு அலுவல் ஏற்பட்டு விட்டமையால், மறைமலையடிகள் பெயரால் அமையும் நூல் நிலையத் துவக்க விழாவுக்கு வர இயலவில்லை. விழாச் சிறப்பாக நடைபெறவும், நூல்நிலையம் வளர்ச்சியுறவும் பிரார்த்திக் கிறேன்.

—தமிழரசுக் கழகத் தலைவர், ம. பொ. சிவஞான கிராமணியார்.

அடிகளார் தாமே தொகுத்த தமிழ், ஆங்கிலம், ஆரியம் முதலான மொழிநூற் கருவூலமாம் மறைமலையடிகள் நூல் நிலையம் தன்னை அணுகி கற்கும் அனைவோரையும் தம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் எழுத்தும், மரபும், இலக்கிய மாண்பும், தமிழர் தமக்கேயுரிய பண்பாடும் சிதைய—சிதைக்க—விடாது காக்கும் செம்மலோராக்கி ஊக்குவித்து வென்றித் திருவுடன் திகழ்வதாக என்று அம்பலவாணர் அம்மையார் திருவருளை வழுத்துதும்.

—சேலம், ஆ. மாணிக்கம்.

மறைமலையடிகள் திருநாமம் கொண்ட நூல் நிலையம் நிறுவியதை நான் வரவேற்கிறேன். அடிகள் தமிழுக்குச் செய்த தொண்டு அளவற்றன. திரு. சுப்பையா அவர்கள் இவ்விஷயத்தில் முன் நின்று செய்வதற்காக நான் அவரைப் போற்றுகிறேன்.

—புதுடில்லி, ஜெ. சிவசண்முகம் பிள்ளை.

தமிழ்மொழி தனித்தியங்கும் என்று கூறி, இனித்த நறுந் தமிழில் எழுதியும் பேசியும் வழிகாட்டிய தண்டமிழ்க்கடல் மறைமலையடிகளாரின் பெயரினைச் சூட்டி அமைக்கப்படும் இந் நூல் நிலையம் வளர்ந்து ஓங்கி நீடு நின்று நிலவத் தடங்கருணைப் பெருங்கடலை வேண்டி வழுத்துகின்றோம்.

மக்களினத் தொட்டிலாய் மலர்ந்து, தென்னவன் ஆட்சியிற் கிடந்து, முந்துநூல் கண்ட பழந்தமிழ்நாடாகிய இலங்கையிலே இன்று தமிழ் வாழுமோ என்று எண்ணி ஏங்குகின்றோம். இந்த நிலையில், தமிழ் ஆராய்ச்சிக்கான நூல் நிலையம் உருவாவது சாலச் சிறந்தது. தங்களையே நோக்கி வாழ்கின்றோம்.

—கொழும்பு, மு. கணபதிப் பிள்ளை.

மறைமலையடிகள் தமிழ் உணர்ச்சியின் தலையூற்று. தன் நிலைக்களமே அவர்களின் நூற்கருவூலம். அது இனி ஊருணியாகப் பயன்தரப்போவதை யறிந்து பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தது போல உவகை எய்துகின்றேன்.

நூற்கருவூலமும், அடிகளார் புகழும் தமிழ் உணர்ச்சியும் திருவருட்பொலிவும் என்றும் நின்று நிலவுக.

—அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ச. தண்டபாணி தேசிகர்.

கழகத்தார் புரியும் செயல்களுள் ஒவ்வொன்றும் பலரும் பாராட்டக் கூடியதாய் என்றும் நிலைத்த புகழினை உடையதாய்த் திகழ்தல் கண்கூடு. அறிஞர் சுப்பையா பிள்ளை அவர்கள் ஆற்றலும் பிற பேரன்பர்களின் ஒத்துழைப்பும் பெரிதும் போற்றுதற்குரியன. செந்தமிழ்க் கடலாம் மறைமலை அடிகளார் திருப்பெயரால் நிறுவப்பெறும் நூல் நிலையம் உலகம் போற்றும் வண்ணம் நிலைத்து நின்று நம் தமிழ்நாட்டிற்குப் பேரும் புகழும் தரும் என்று நான் நம்புகின்றேன்.

—புலவர், மயிலை சிவமுத்து.

முதுபெரும் புலமையை நிலைக்களனாகக் கொண்டு பழுதிலா நூல்கள் பலவற்றைத் தமிழினமும் தமிழும் மாட்சிமையடைவான் வேண்டி எழுதின அம் மும் மொழிப் புலவர்தம் நினைவாக நூல் நிலையம் அமைதல் சிறப்புடைத்தே.

—புதுச்சேரி, வித்துவான், M. D. வேலாயுதனார்.

தனித்தமிழ் இயக்கத்துக்கு அடிகோலிய தன்னிகரில்லா மும்மொழிப்புலமை சேர் செம்மல் மறைமலையடிகளார் நுண்ணி தின் ஆய்ந்து தொகுத்து வைத்துள்ள ஆங்கிலம், தமிழ், ஆரியம் என்னும் மும்மொழிகளிலுமுள்ள நூல்களும், பிறநூல் களும் அடங்கிய நூல்நிலைய நூல்களின் தொகுப்பைப் பொது மக்கள் பலரும் கற்றுணருமாறு நூல்நிலயத்தில் வைப்பது சாலச் சிறப்புடையதாகும்.

—தஞ்சை, வித்துவான், அ. வடிவேலன்.

என்னுடைய பாட்டனார் செய்த தமிழ்த் தொண்டு தமிழர் மனதில் என்றென்றும் நிலைத்திருக்க, தாங்கள் திறக்கும் நூல் நிலையம் மிக உதவியாக இருக்கும்.

—சேலம், மா. மறைக்காடன்.

மறைமலையடிகள் தமிழருக்குச் செய்துள்ள தொண்டுகள் தமிழர்கள் என்றும் மறக்கொணாததாகும். அவர் எழுதியுள்ள நூல்கள் ஒவ்வொன்றும் விலைமதிக்க வொண்ணாத கருவூலங் களாகும்.

—காஞ்சிபுரம், து. கு. சிவன்.

ஆங்கிலமும், அருந்தமிழும், ஆரியமும் ஐயமறக் கற்று அரிய ஆராய்ச்சித் திறன்பெற்றுப் பல்கலைக் கழகமாய் அடிகள் பாரினில் திகழ்ந்தனர். நூல்கள் பல இயற்றிச் சைவப் பணியும், செந்தமிழ்ப் பணியும் ஆற்றியவர் அடிகள் என்பதை ஐயமின்றிக் கூறலாம். ஐயம் என அணுகுவார் ஐயமகற்றியும், திரிபு என்று வருவார் திரிபு அகற்றித் தெளிவு பெறச் செய்தும், ஆரியச் சொல்லா அருந்தமிழ்ச் சொல்லா என்பதை ஆராய்ந்து அயலா ரும் ஏற்க அறுதி இட்டு உரைத்த அடிகளார் சென்னையிலே சீரிய நூல்நிலையமாக, தமிழ்நாட்டிலே நடமாடும் தன்னிகரற்ற நூல்நிலையமாகத் திகழ்ந்ததை எண்ணும்போது உள்ளத்திலே உவகை பொங்குகிறது.

—கோவை, ஈ. வே. சிங்காரவேலு.

மொழி, சமயம், அரசியல் துறைகளில் தாழ்ந்துகிடந்த தமிழகத்தைத் தம் தமிழ்த்தொண்டால் தமிழ்மொழி ஆட்சிப் பீடம் ஏற்றித் தரணியெல்லாம் பரணிபாடும் அளவுக்கு வள முறச்செய்து, தமிழர் தம் வாழ்வையுயர்த்திய தமிழ்த்தந்தை உயர்திரு மறைமலையடிகளார் அவர்களின் பெயரால் நூல் நிலையம் தோன்றுவது அவர் நம்மிடையே என்றும் நின்று நல்வழி காட்டுவதற்கொப்பாகும்.

—மதுரை, எம். தட்சிணாமூர்த்திக்கோன்.

அடிகள் உலக அறிவிற்கும் சிறப்பாகத் தமிழுக்கும் செய்துள்ள பேருதவி எவரும் செய்ததில்லை.

—கோவை, சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்.

அறிவுச் செல்வம் பெருகப் பள்ளிகள் எவ்வளவு தேவையோ அவ்வளவு நல்ல நூல்கள் நிறைந்த நூல் நிலையங்கள் தேவை. பல்வேறு நிலப்பகுதிகளில் விளைந்த தானியத்தில் நன்மணிகளை மட்டும் திரட்டிச் சேமித்து வைத்த களஞ்சியம் பஞ்சகாலத்துப் பசிப்பிணி போக்குமாறுபோல, அரும்பெரும் புலவர் பெருமான் மறைமலையடிகளார் தொகுத்த நன்னூல்களும், பல ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி புரிந்துதவும் கழகம் தொகுத்த நூல்களும் சேமித்து வைக்கும் சிறந்த கருவூலமாக இந்நூல் நிலையம் விளங்கப்போவதறியப் பெருமிதங் கொள்கிறேன்.

—பெங்களூர், டி. கே. நாகாம்பாள் எம். ஏ.

தமிழின் சிறப்பே தனது குறிக்கோளாகக் கொண்டு அல்லும் பகலும் தமிழ்மொழியின் ஆக்கத்திற்கு உறுதுணையாக விருந்து தொண்டாற்றிய புலமைசேர் செம்மல் மறைமலையடிகளார் நினைவாகச் சென்னையில் மறைமலையடிகள் நூல் நிலையத் திறப்புவிழா நடைபெறுவது குறித்து மிக்க மகிழ்ச்சி. விழா இனிது நடைபெற விழைகின்றேன்.

நூல் நிலையம் தமிழ்மக்களுக்கு இன்பச் சோலையாகத் திகழ்ந்து மிளிர வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்,

—பி. தங்கராஜன், பி. எஸ்ஸி. (ஆனர்சு),
முதல்வர், செந்திக்குமார நாடார் கல்லூரி, விருதுநகர்.

மறைமலையடிகள் தமிழுலகிற் பெரியாராய் வாழ்ந்தவர்கள் கல்வியிற் பெரியார். அவர்கள் தாம் சேர்த்த நூல்களைத் தமிழுலகம் பயன்படச் செய்தது பற்றித் தமிழுலகம் நன்றி பாராட்டும்.

—கோவை, சம்பந்த சரணாலயத் தம்பிரான்.

மறைமலையடிகள் பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்த் திகழ்ந்த தூய அறிவுப் பிழம்பு வடிவினர். அவருடைய அறிவால் தமிழ்மக்கள் கண்ட பழந்தமிழ் உண்மைகள் பல. அவ்வுண்மைகள் தமிழ்மக்களின் உள்ளத்தில் யாண்டும் நிலவத்தக்கன. ஊருணி நீர்நிறைந்தாற்போல அவர் எழுதியும் திரட்டியும் வைத்திருந்த அறிவு நூல்கள் பலவும் மக்கள் படித்துப் பயன்பெற்றுய்யுமாறு அமைந்துள்ள மறைமலையடிகளாரின் நூல்நிலையம் நீடு வாழ்க.

—ஈரோடு, வித்துவான், வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்.

மும்மொழிப் புலவரின் ஆராய்ச்சி நூல்களுடன், கழகம் தொகுத்துள கருவூல நூல்களும் இணைய, நூல் நிலையம் சிறப் போடிலங்கி, மொழி வேற்றுமையின்றி, இனவேற்றுமையற்று அறிவொடு கலைகளும், அருந்தமிழும், பன்மொழியும் வளர வழிசெய்து, குன்றின் மேலிட்ட விளக்கென என்றும் நின்று விளங்கிச் செயலாற்ற வேண்டுகிறேன்

மொழியொடு மெய்ப்பொருள் வரலாறு மிளிர மக்கள் நல்வாழ்வு பெறுவர்.

—மாயூரம். கோ. ப. வேலன்.

அடிகளார் தமிழ்—ஆரியம்—ஆங்கிலம்—ஆகிய மும்மொழி களிலும் வல்லவர்; நூலியற்றல்—சொற்பெருக்காற்றுதல்—கற்பித்தல் ஆகிய புலவர்க்கின்றியமையாத முத்திறமும் வாய்ந்த வித்தகர்; சொல்லும் செயலும் ஒன்றுபட்ட தூயர்; எவரிடத்தும் புலமையைக்கண்டு பாராட்டும் பண்பினர்; நுண் மாண் நுழை புலமைக்கு எடுத்துக்காட்டாக இலங்கியவர். அவர்கள் இயற்றிய நூல்கள் தமிழணங்கை அலங்கரித்து விளங்குகின்றன.

—மேலூர், வித்துவான் வீ. குமாரசாமி ஐயர்.

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் அடிகள் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் உதவி ஆசிரியராயிருந்தபோது முல்லா சாகிபு தெருவில் ஒரு வீட்டு மாடியில் குடியிருந்தார். அருகில் நான் குடியிருந்தேன். மாத முதலில் கல்லூரியில் பெற்ற ஊதியத்தில் (அப்போது அது சொற்பத் தொகையே) நான்கிலொரு பங்கு தந்து ஓர் ஆங்கில நூலை (on mesmerism) வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து தம் ஊதியத்தின் மிச்சத்தொகையைத் தம் மனைவியிடம் தரும் சமயத்தில் நானும் என் நண்பரொருவரும் கண்டோம். அவரது தியாகத்தை மெச்சினோம்.

அதுபோன்ற பல அரிய நூல்களைக்கொண்ட இந்நூல் நிலையம் ஊருணி நிறைந்தாற் போலவும் உள்ளூர்ப் பயன் மரம் பழுத்தாற் போலவும் தமிழன்பர்களுக்குப் பயன் தருவதாக.

—பழனி, க. அரங்கசாமி முதலியார்.

மறைமலையடிகளார் நூல்கள் யாவும் நற்றமிழ்க் கருவூலங் கள். உலகெங்கும் இத் தெய்வீகத் தமிழைப் பரப்பி, மக்களை உய்விக்குமாறு, மறைமலையடிகள் நூல்நிலையம் திறக்கப்படுவ தால், இம்முனிவரின் அருளை நினைந்து, இந்நூல்நிலையம் என்றும் நிலைத்து ஓங்கிச் சிறப்புறுமாறு, முழுமுதற் கடவுளின் திருவடி களை மனமார வாயார வாழ்த்துகின்றேன்.

—பாளையங்கோட்டை, டாக்டர், D. R. அண்ணாமலை.

தமிழன் தன்மானங் காக்கும் தூய தமிழ்த் தந்தையாம் மறைமலையடிகளின் நினைவுக் குறியாக, என்றும் நின்று நிலவி வரக்கூடியவற்றுள் அறிவுக் களஞ்சியமாம் நூல்நிலயத்தினும் சிறந்ததொன்று காணமுடியுமோ? கழகம் மூலம், தமிழுக்கும் சைவத்துக்கும் தங்கள் அருமை அண்ணனர் தொடங்கிய பணிகளைப் பின்னும் பெருக்கமாகத் தாங்கள் செய்துவருவதனைத்தும் சிறந்து பலர்க்கும் உதவ எல்லாம்வல்ல ஆண்டவன் அருள்புரிவாராக.

—ராஜபாளையம், ஆர். ஜி. நல்லகுற்றலம் பிள்ளை.

மறைமலையடிகளாரே ஒரு நூல்நிலையம்—ஒரு பல்கலைக் கழகம். அத்தமிழ்க் கடலின் பெயரால் நூல்நிலையம் நிறுவப் பெறுவது சாலச் சிறந்தது. அறிவுக் கருவூலத்தின் ஆராய்ச்சிக் கையெழுத்துக் குறிப்புகள் விலை மதிப்பிடமுடியாதன. ஷேக்ஸ்பியரை ஆங்கிலேயர்கள் போற்றுவதுபோல் அடிகளாரைப் போற்றவேண்டுவது தமிழர்களின் முதற் கடமை.

பெண்மைக் குரலிடத்தே ஆண்மை உயிர்ப்பையும் உணர்வையும் ஊட்டிய மாண்புசால் தலைவராவார்கள் அடிகளார். பேச்சுக் கலைக்கு ஒரு வரம்பு முறை அமைத்தவர் மறைத்திரு அடிகளார் ஆவார்கள். காவியுடுத்துங்கூட ஆவிபோம் மட்டும் அருந்தமிழிற்கே ஆக்கம் தேடிய தொண்டர் அடிகளார். தனித் தமிழியக்கத்திற்குத் தனி முதல் தலைவர்.

—சேலம், டாக்டர், எஸ். எம். நமசிவாயம்.

மறைமலையடிகளாரின் அருள் நிதியங்களாகிய அவரது நூல்நிலையம் தமிழ் மக்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், ஓர் அறிவியற் கருவூலமாகும்.

—ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்,
அண்ணமலைப் பல்கலைக்கழகம்.

இந்நூல் நிலையம் பல்லாண்டுகள் இப்பாரிடை நற்றமிழ்த் தொண்டாற்றி என்றும் நின்று நிலவுக என உளநிறை நல்வாழ்த்து நவிலுவன்.

—வைரிச்செட்டிபாளையம், வி. அரங்கராசன், பி. ஏ., பி. டி.,

அடிகளாரைத் தமிழகம் எவ்வளவிற்கெவ்வளவு பாராட்டுகிறதோ அவ்வளவிற்கவ்வளவு தன்னிலையுணர்ந்து முன்னிலையுணர்ந்து முன் ஏறுகிறது என்பது பொருள்.

—திருக்குறள் கழகம், சேலம், மு. இரத்தினம் பி. ஏ. (ஆனர்சு)

மறைமலையடிகளின் தனித்தமிழ் உணர்ச்சியும் ஆரிய வெறுப்புணர்ச்சியும் தமிழ்நாடெங்கும் பரவட்டும்.

—சா. குருசாமி, ஆசிரியர், "விடுதலை" சென்னை.

இவ் விருபதாம் நூற்றாண்டில் இணையற்ற அறிவுக்குன்றமென இலங்கிய மறைமலையடிகளார் ஈட்டியருளிய ஞானச் சுரங்கத்தைப் பேணிக் காக்கும் கழகத்தின் பெரும்பணி பெரிதும் போற்றற்குரியதாகும்.

அடிகளாரின் அறிவுக் கருவூலமாகிய நூல்நிலையத்தை அமைக்கும் இடம், சென்ற நூற்றாண்டில் அருள் ஞானச் செல்வராய்த் திகழ்ந்த திருவருட்பிரகாச வள்ளல் இராமலிங்க அடிகள் எழுந்தருளியிருந்து இன்னுரையாற்றிய பொன்னனைய நன்மாளிகை என்பதை எண்ணும்போது அஃது எல்லையற்ற உவகையினை அளிப்பதாகும்.

—நெல்லை, அ. க. நவநீதகிருஷ்ணன்.

மறைமலையடிகளார், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பதற்கேற்ப, தாம் அரிதிற் சேர்த்து வைத்துப் படித்த புத்தகங்கள் அனைத்தும் பலருக்கும் பயன்படவேண்டும் என்று கருதி,

"இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்(து)
அதனை யவன்கண் விடல்"

என்ற பொய்யாமொழிக்கு ஏற்ப, அப்புத்தகங்களைத் தங்களிடம் ஒப்படைத்து ஒரு பொது நூல் நிலையம் திறக்கும்படி ஏற்பாடு செய்தது மிகவும் பாராட்டத்தக்கது. அடிகளாரின் திருவுள்ளப்பாங்கின்படியே தாங்கள் அந் நூல்நிலையத்தை ஏற்படுத்தியதை யான் மிகவும் பாராட்டுகின்றேன். திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பெரிய புராண விரிவுரை நிகழ்த்திய பாளையம். சோமசுந்தர செட்டியார் அவர்கள் இல்லத்தில் இந்நூல் நிலையம் அமைந்தது மிகவும் பொருத்தமாகும்.

—தாம்பரம், பேராசிரியர், பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் எம்.ஏ.,

மறைமலையடிகள் உருப்படுத்திய நூல்களைத் தமிழர் அனைவரும் கண்டு கற்றுப் பயன் அடையும் பெருவாய்ப்பினைத் தந்துதவும் உங்களைத் தமிழுலகம் என்றும் மறவாது. வாழ்க மறைமலையடிகள் புகழ்! வாழ்க நூல் நிலையம்!

—பேராசிரியர், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

நாற்றிசையும் புகழ் மணக்க வாழ்ந்த வள்ளுவத்தின் இலக்கியமாம் மறைமலையடிகளார் திருப்பெயரினைத் தாங்கா நிற்கும் நூல்நிலையம் மொழிப்பணிக்கு முன்வரும் அனைவருக்கும் ஒரு கலங்கரை விளக்காக ஒளிவீசித் திகழும் என்பது உறுதி.

—தமிழ் மாணவர் மன்றம் கல்கத்தா, மு. நாராயணசாமி.

அடிகளாரின் கொள்கைகள் பூத்துக் காய்த்துப் பயன் அளித்துக்கொண்டிக்கும் உரிய காலத்தில் இவ்வரிய பணி புரிவதைக் காணின் தமிழ் உள்ளங்கள் பூரிக்கின்றன.

—நக்கீரர் கழகம், சென்னை, சிறுவை. மோகனசுந்தரம்.

தமிழுக்கும் சைவத்திற்கும் அருந்தொண்டு புரிந்துள்ள அடிகளார் நினைவு கருதித் திறக்கப்படும் நூல்நிலையம் மக்களுக்கு அறிவுக்களஞ்சியமாகத் திகழ்வதாக.

கலைமகள் கல்விநிலையம், ஈரோடு, எஸ். மீனாட்சிசுந்தரம், பி.ஏ.,எல்.டி.

நுண்ணறிவு வளர்க்கும் நூல்நிலையம் தண்ணிய தொண்டாற்றித் தக்க பல நூல்களுடன் பெருகி வாழ்ந்து மக்கள் வாழ வழியமைக்குமென்று நம்புகிறோம். இத்தொண்டினைத் தொடங்கிய பெருமக்களைப் பாராட்டுகிறோம்.

—கரந்தைத் தமிழ்ச் சங்கம், சி. வேதாசலம், பி.ஏ., பி.எல்.

தமிழ், சமயம், அரசியல், சமுதாயத்துறைகள் அனைத்திலும் ஈடுபட்டு அப்பெரியார் ஆக்கிய நூல்கள் பலப்பல. அவர் எழுதியுள்ள நூல்கள் யாவும் பளிங்கு நீர்ப்பொய்கைகளாகும். அதில் எட்டிப் பார்ப்போர் முகமெல்லாம் நிழலாடும்.

—எம். எம். தேவராச செட்டியார்,

செயலாளர், மைசூர் மாகாணத் தமிழ்ச் சங்கம், பெங்களூர்.

மன்னு புகழ்கொண்ட பொன்னனை நூல்களை மக்கள் யாவரும் நன்கு படித்துப் பயன்பெறுவார்கள் என நம்புகின்றேன். நூல்நிலையம் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

—மன்னார்குடி இளங்கோ மன்ற அமைச்சர்.

தேன்மொழியாம் தமிழ்மொழியிலும், மற்றும் ஆங்கிலம், ஆரியம் இவற்றிலும் ஆயிரக்கணக்கில் அரிய நூல்களைப் படைத்து, இலக்கிய உலகில் இணையிலா இடத்தினைத் தமக்கெனத் தேடிக்கொண்ட பேரறிஞரின் நினைவு மக்கள் மனத்திலே பசுமையாக நின்று நிலவும் வண்ணம் அவர்தம் பெயரிலே நூல் நிலையம் நிறுவுவது சாலப்பொருத்தமே.

—தமிழர் மன்றம், மாதுங்கா, கு. க. சுந்தரம்.

## கீழ்க்கண்டவர்களிடமிருந்தும் வாழ்த்துரைகள் வந்துள்ளன

என். எஸ். ஏ. ஆர். அருணாசலன் செட்டியார், தியாகராயநகர்.

நடராசன், செயலாளர், ஸ்ரீ நடராசாகல்விக்கழகம், சென்னை.

அ. கிருஷ்ணசாமி வாண்டையார், எம்.எல்.ஏ., பூண்டி.

பேராசியர், அ. சீநிவாசராகவன், முதல்வர், வ. உ. சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி.

பி. கோதண்டராமன், ஸ்ரீ அரவிந்த ஆசிரமம், புதுச்சேரி.

கா. சங்கரனார், நெல்லை.

கி. வெ. இராமன், நாகை.

டி. ஆர். சுந்தரம், பப்ளிக் பிராசிகியூட்டர், கோவை.

ஆர். கந்தசாமி மூப்பனார், பி.ஏ.,பி.எல்., குடந்தை.

கொ. அ. அப்பாய் செட்டி, சேலம்.

பழ. நா. நாராயணன் செட்டியார், நேமத்தான்பட்டி.

மு. தெ. நாயகம், பாளையங்கோட்டை.

ஏ. சி. பால் நாடார், தூத்துக்குடி.

வி. சி. சுப்பையா கவுண்டர், கோவை.

டி. எஸ். ஆதிமூலம், எம்.எல்.ஏ., முக்கூடல், நெல்லை.

பேராசிரியர் அர. சு. நாராயணசாமி, விருதுநகர்.

திருமுறைமணி, மு. கண்ணப்பன், பவானி.

ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளை, செயலாளர், திருவள்ளுவர் கழகம், அம்பாசமுத்திரம்.

சு. திருஞானம், சபல்பூர்.

அ. வேதரத்தினம், வேதாரண்யம்.

டி. சி. பாலசுப்பிரமணியம், செயலாளர், திருவள்ளுவர் கழகம், விக்கிரமசிங்கபுரம்.

புரிசை. சு. முருகேசன், திருவண்ணாமலை.

பேராசிரியர், பாலூர், கண்ணப்ப முதலியார், சென்னை.

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், சென்னை.

வித்துவான், வீரசிவம், திருவாவடுதுறை ஆதீனம்.

புலவர், ஆர். ஏகாம்பர நாதன், அமைச்சர். கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சை.

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி.

புலவர், ப. அரங்கசாமி, லால்குடி.

வித்துவான், பொ. சுப்பிரமணிய பிள்ளை, திருவிடைமருதூர்.

தசரத ராமசாமி, மதுரை.
நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., சென்னை.
அ. திருமலை முத்துசுவாமி, எம். ஏ., பி. டி., நூல்நிலையத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.
என். சுப்பிரமணியம், 'சுகி', திருச்சி.
புலவர், வி. சிவக்கொழுந்து, பெரியகுளம்.
வித்துவான், க. வ. முத்தையா, பி. ஏ., நெல்லை.
வித்துவான், இரா. கண்ணன், தால்மியாபுரம், திருச்சி.
மோகனசுந்தரம், தலைவர், மணவழகர் மன்றம், சென்னை.
பெ. தூரன், தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.
டாக்டர், வி. ஆர். மூர்த்தி, தலைவர், நகராண்மைக் கழகம், குடந்தை.
அகிலன், திருச்சி.
வித்துவான் மறை-திருநாவுக்கரசு, தூத்துக்குடி.
வ. பா. தாமரைக்கண்ணி, வல்லை. பாலசுப்பிரமணியம், சென்னை.
சு. இராமச்சந்திரன், திருச்சி.
டி. மாணிக்கவாசகம், மீனாட்சி மில்ஸ், மதுரை.
பேராசிரியர், ந. சஞ்சீவி, எம். ஏ., காஞ்சிபுரம்.
டி. கே. நாராயணசாமி நாயுடு, கூடலூர்.
சி. காந்திமதிநாதன், டிபுடி பஞ்சாயத்து ஆபீசர், பெரியகுளம்.
கே. என். சீனிவாசன், முன்னாள் நகராண்மைக் கழகத்தலைவர் சென்னை.
புலவர் க. வெள்ளைவாரணனார், அண்ணாமலை நகர்.
டி. வி. சதாசிவப் பண்டாரத்தார், அண்ணாமலை நகர்.
வித்துவான், ஆர். தீர்த்த முதலியார், சென்னை.
கு. சிவமணி, எம். ஏ., எல். டி., காரந்தை, தஞ்சை.
டாக்டர், கே. எஸ். கிருஷ்ணன், டி. எஸ்ஸி, எஃப். ஆர். எஸ் தலைவர், பாரதி தமிழ்ச் சங்கம், மதுரை.
ஓரியண்ட் லாங்மன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
டாக்டர், இராகவன், நெல்லை.
எஸ். வி. சுவாமிநாத பிள்ளை, சென்னை.
குன்றக்குடி அடிகளார், குன்றக்குடி.
நா. ப. தணிகை அரசு, இந்துமத பாடசாலை, வாலாசாபாத்து.
அண்ணல்தங்கோ, வேலூர்.
ஆபிரகாம் அருளப்பன், பி. ஏ., பாளையங்கோட்டை.

# திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்
# வெளியீட்டு விழா

இவ்விழா, சென்னை "சென்னகேசவப் பெருமாள்" அற நிலையப் பாதுகாப்பினரால் 24—8—1958 மாலை ஆறு மணிக்கு அத்திருக்கோவில் திருமண்டபத்தின்கண் சிறப்புடன் தொடங் கப்பெற்றது. விழாவினுக்குச் சென்னைமாநில ஆளுநர் மாண்பமை விட்டுணுராம் மேதியவர்கள் ஆர்வமுறத் தலைமைபூண்டனர்.

விழாத் திருமுறைத் திருமாமறைச் செந்தமிழ்த் திருப் பாட்டுத் திருமறை ஓதுவார் பண்ணுற ஓதத் துவங்கப்பெற்றது. மறைவல்லாரும், மெய்யடியாரும், நிறைபெரும் புலவரும், சான் றோரும், ஆட்சிமுதன்மையரும், செல்வரும், பெருமக்களும் பேரளவினராகக் குழுமியிருந்தனர். பெண்பாலாரும் பேரளவின ராக வந்திருந்தனர்.

அத்திருக்கோவிலின் வழிவழி உரிமை அறங்காவலரும் அதுபோன்று பல திருக்கோவில்கள், பல பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி முதலிய மாணவர்கள் பன்னூற்றவர்கட்குப் பல வூர்களில் "மணவி விடுதி" என்னும் திருப்பெயரால் உண்டி, உறையுள், உறை முதலியன உவப்புடன் ஓவாது நல்கி உற்றுழி யுதவும் நற்றவச்சாலைகள் முதலியவற்றிற்கு உரிமை அறங்காவ லருமாகிய உயர்திரு. சி. இராமகிருட்டிண முதலியார், பி.எ., அவர்கள், தலைவரவர்கட்கு ஒரு சிறந்த வரவேற்பு நன்மொழி படித்தளித்தனர்.

தலைவரவர்கள் சிறந்ததொரு தலைமையுரை ஆற்றினர். அதன் மொழிபெயர்ப்புச் சுருக்கம் வருமாறு:

திருக்கோவில்கள் சிறந்த சிற்பக்கலைகட்கு மட்டுமன்றி நமது பண்பாடு, நாகரிகம் முதலியவற்றை நன்கு விளக்கும் உறைவிடமாகவும் திகழ்கின்றன. உலகத்திலேயே மிகமிகப் பழமை வாய்ந்த மொழி தமிழ். இம்மொழி கிறித்து தோன்று வதற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாகும். இஃது இந்திய மொழிகள் எல்லாவற்றினும் மிக்க வளமுடையதாகும். தமிழில் பல இலக்கியங்கள் உள்ளன. அவை பல ஆண்டுகள் தொட்டு இன்றுகாறும் நன்கு பாதுகாத்துவைக்கப்பட்டுள்ளன. நம் இலக்கியங்கள் பெரும்பாலும் சமயக்கருத்துக்கள் நிறைந் துள்ளன. கடவுட்பற்றே நம்மவர்களின் நாடொறுமுள்ள

வாழ்க்கையின் தலைசிறந்த நோக்கமாக இருந்தது. முனிவர்களும் அடியவர்களும் பாடிவைத்துள்ள அருட்பாடல்கள் ஆருயிருய்யும் ஆன்மீகக் கருத்துடையன. உலகில் பல சமயங்கள் உள்ளன. ஆனால், அவையெல்லாம் ஒரே கடவுளை அடையும் வழியைத் தான் காட்டுகின்றன. சமயவேற்றுமைகளெல்லாம் வீண் மயக்கமேயன்றி வேறில்லை. எல்லாச் சமயங்களின் அடிப்படைக் கருத்து ஒற்றுமையேயாகும். திருவாசகம் போன்ற நூல்களில் காணப்படும் சமயம், ஒழுக்கம், உயர்கலை முதலியவற்றின் கருத்துக்களை அனைத்துலகும் அறியச்செய்தல் வேண்டும். அப் பொழுதுதான் மற்றவர்கள் இம்மூலநூலை அறிந்து பயன்கொள்ள முடியும்.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் செவ்வையுற மொழி பெயர்த்த கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களையும் அதற்கு ஆக்கம் அளித்த அறங்காவலர்களையும் பாராட்டுகின்றேன் என்பதாம்.

சென்னைமாநில உள்நாட்டமைச்சர் பக்தவத்சலனாரவர்கள் நூலை வெளியிட்டுப் பல அரிய கருத்துக்களை நுவன்றனர். சுருக்கம் வருமாறு :

சமயம், கலை, இலக்கியம், பண்பாடு முதலியன பற்றிக் கூறும் பண்டை நூல்களை ஆராய்வதற்கென ஓர் ஆராய்ச்சி நிலையம் பழனியிலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் நிறுவப் படுதல்வேண்டும். சிறந்த தெய்வப் பனுவலாட் திருவாசகம் தலைசிறந்தொன்றாகும். இந்நூல் ஆங்கில மொழிபெயர்ப்பாக வருவது உலகிற்குப் பெரும்பயன் விளைப்பதாகும். எல்லாரும் அறிந்து இன்புற ஏதுவாகும். திருக்கோவில்கள் தூய நிலையங்களாகும். அவ்விடங்கள் கலைமுதலிய பலவற்றிற்கும் தாயகமாகும். அவற்றைப் போற்றி வளர்ப்பதும் இன்றியமையாததாகும் என்பதே.

அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் திரு. உத்தண்டராம பிள்ளை ஐ. ஏ. எஸ். அவர்கள் காமக்கோடாதிபதி சங்கராச்சாரிய சாமிகளிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்தியைப் படித்தனர். அவர்கள் பாராட்டிப் பேசியதன் சுருக்கம் வருமாறு :

மாணிக்கவாசகரின் மாண்பினை நன்கு விளக்கினர். திருவாசகம் சைவசித்தாந்தக் கருத்துக்களைத் தன்னகத்துப் பொதிந்துள்ளது. கீதை, திருக்குறள், திருவாசகம் ஆகியவை இந்து சமயக் கருத்துக்களையும் மெய்ப்பொருளாம் தத்துவங் களையும் உள்ளடக்கியுள்ளன. திரு. பாலசுப்பிரமணியம் அவர்

களின் இம்மொழி பெயர்ப்புப் பணி தமிழன்பர்கட்கெல்லாம் ஊக்கம் அளிக்கக் கூடியதென்பதேயாம்.

தலைமை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நடுவர் திரு. எம். பதஞ்சலி சாத்திரியாரவர்கள் பேசியதன் சுருக்கம் :

திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களின் பணி இந்து சமயத்துக்குச் சிறந்த தொண்டாகும். கோவிற்சொத்துக்களை வேறு பணிகளுக்குப் பயன்படுத்த முயற்சிசெய்யப் படுகிறது. இது சரியல்ல. இதனை யாம் எதிர்த்தல்வேண்டும். கோவில் சொத்துக்களெல்லாம் பத்தியின் வளர்ச்சிக்கே பயன் படுத்தப்படுதல்வேண்டும். அப்படிச் செய்தால் மக்கள் அதனை வரவேற்பார்கள். தருமபுரம், திருப்பனந்தாள் போன்ற மடங்கள் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களின் தொண்டை நன்கு பயன்படுத்தி அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோரின் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் வேண்டுமென்பதே.

பின்னர் திரு. கே. எஸ். இராமசாமி சாத்திரி, திரு. கி. வ. செகந்நாதன், எம்.ஏ., முதலியோரும் பேசினார்கள்.

திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் சுருக்க விளக்கமும், திட்பநுட்பமும், தெளிவும் இனிமையும் பொதுளப் பேசினார்கள். அதன் சுருக்கம் வருமாறு :

முதன்முதலாக ஐம்பத்தெட்டு ஆண்டுகளுக்குமுன் இத் திருவாசகத்தை ஆங்கிலத்தில் அருமையும் பெருமையும் பொருந்த மொழிபெயர்த்த திருத்தகு சி. யூ போப்பையர் துரை மகனாரவர்கட்கு இம்மொழிபெயர்ப்பு நூலை யான் அன்புடன் ஒப்புவித்துரிமையாக்குகின்றேன் என்பதே.

திருக்கோவில் அறநிலைய நிறைவேற்றுச் செயலாளர் திரு. எல். பி. கந்தசாமி அவர்கள் நன்றிநவில விழா இனிது நிறைவுற்றது.

குறிப்பு : இவ்வருமை வாய்ந்த திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புத் தமிழ்த்திருமுறைகட்கோர் அரிய புதுமலர்ச்சியைத் தந்து திருக்கோவில் வழிபாட்டாளர்கட்குத் திருமுறைப் பெருமையினை நன்குணர்த்தி அப்பெருமாமறையான் அனைத்து வழிபாடும் இனைத்தனையும் வழுவின்றி நாளும் நயப்புடனியற்றப் பயனார்பெருந் துணைபுரியுமென்பது உறுதி.

—ஆசிரியர்.

# செய்திகளும் குறிப்புக்களும்

## (க) மயிலைத் தமிழ்ச்சங்கத் துவக்கவிழா

மயிலைத் தமிழ்ச்சங்கத் துவக்கவிழா 17-8-58-இல் மயிலை சினிவாச சாத்திரியார் மண்டபத்தில் நடைபெற்றது. விழாவை டாக்டர் சி. பி. இராமசாமி ஐயரவர்கள் துவக்கிவைத்தார் திரு. டி. பசுபதியவர்கள் புறநானூற்றுப் பாடல் ஒன்றை இராகமாலிகையில் பாட விழாத் துவங்கிற்று. திருப்புகழ்மணி திரு. டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். விழாவிற்குப் பெருமக்கள் பலர் வந்திருந்தனர். டாக்டர் சி. பி. இராமசாமி ஐயரவர்கள் துவக்கவுரையில் கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்:—

" தமிழ் இலக்கியங்கள் மிகப் பெருமை வாய்ந்தவை. இதனாலேயே போப்பையர் போன்ற மேனாட்டறிஞர்கள் தமிழ்மொழி கலாசாரம் ஆகியவற்றில் பற்றும் ஈடுபாடும் கொண்டிருந்தனர். சேர சோழ, பாண்டிய மன்னர்கள் கொடைத்திறனும், அன்புள்ளமும் கொண்டவர்களாக வாழ்ந்தனர். பிற மொழிகளில் காணப்படாத சுவை மிகுந்த பொருட் செறிவுள்ள பகுதிகள் பல தமிழிலக்கியங்களில் காணப்படுகின்றன. மொழிகளில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்ற வீண் போராட்டங்களில் இறங்குவது தவறு.

" அகநானூறு புறநானூறு ஆகியவை தொகை நூல்கள். அவற்றை இயற்றிய பழங்காலத் தமிழ்ப் புலவர்கள் வாழ்க்கையின் முழுத் தன்மையை உணர்ந்தவர்கள். அவர்கள் உலக வாழ்க்கையில் எல்லாப் பொருள்களைப் பற்றியும் எழுதியுள்ளனர். தமிழர் பண்பாடு என்பது வாழ்க்கையோடு இணைந்தது. பிறநாடுகளில் பண்பாடு என்பதே காணப்படாத நிலையில் தமிழ்நாட்டில் அது மேலோங்கி நின்றது. தெருக்களை அசுத்தப்படுத்துவது சோழ மன்னர் காலத்திலேயே குற்றமாகக் கருதப்பட்டது. தற்போது மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ள இடம் சோழர்கள் காலத்திலேயே அணைகட்டுவதற்கு ஏற்ற இடமாகக் குறிக்கப்பட்டிருந்தது. காஞ்சிமா நகரம் புத்த சமண கலாசாரங்களுக்கு இருப்பிடமாக இருந்திருக்கிறது. முதலாவது, இரண்டாவது தமிழ்ச் சங்கங்கள் கடல்கோளால் அழிந்து விட்டன. இம்மாதிரியான நிலைமைகள் எல்லாம் நன்கு ஆராயப்படவேண்டியவை" என்று பேசினார்.

**குறிப்பு :** திரு. சி. பி. இராமசாமி ஐயர் அவர்களைப் போன்ற மூதறிஞர்கள் இங்ஙனம் தமிழகத்தின் சிறப்பை இன்றேனும் உணர்ந்து அதனை நாடறியச் செய்யும் முயற்சி பாராட்டற்குரியது. இத்தகையோரின் பேச்சுக்களால் தமிழகத்தில் விழிப்புணர்ச்சி தோன்றும் என்பதில் ஐயமில்லை.

## (உ) ஆராய்ச்சியும் மொழிபெயர்ப்புமே அடிப்படைப் பணிகள்

கடந்த 31—8—58 இல் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்க் கலைமன்ற உறுப்பினர் ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு உயர் நீதிமன்ற நடுவர் திரு. என். சோம

சுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். டாக்டர். மு. வரதராசனார், திருவாளர்கள் டி. இராமலிங்கம், பி. திருஞானசம்பந்தம், எம். ஆர். பெருமாள், கு. கோதண்டபாணி பிள்ளை ஆகியோர் பேசினர். டாக்டர் மு. வரதராசனாரவர்கள் பேசுகையில் டாக்டர் கால்டுவெல் அவர்களின் ஆராய்ச்சிகளைப் பாராட்டியும், சமஸ்கிருதத்திலிருந்து தமிழ் தோன்றியதாகக் கூறப்படும் கூற்றுக்களை மறுத்தும், கால்டுவெல் போன்ற ஆராச்சியாளர்களின் நூல்களை மொழிபெயர்க்கும் முயற்சியில் மாநில அரசினர் அல்லது பல்கலைக் கழகம் ஈடுபடுதல் வேண்டுமென்றும், தமிழ் மாணவர்கள் ஆங்கிலமும் கற்றுத் தேர்ந்து முதன்மையான தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுமென்றும் கூறினார்கள். கல்லூரிகளில் தமிழைப் போதனமொழியாக்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வர் திரு. எம். ஆர். பெருமாள் அவர்கள் வலியுறுத்தினர். திரு. கு. கோதண்டபாணி பிள்ளையவர்கள் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது.

குறிப்பு: டாக்டர். மு. வ. அவர்களின் கருத்துரைகள் மிகமிகப் பயனுள்ளனவாகும். அரசியலார் இதுபோன்ற கருத்துக்களைச் செயல் முறைக்குக் கொண்டுவருவார்களாயின் கல்வித்துறையில் நாடு முன்னேறும் என்பதில் ஐயமில்லை. கல்லூரிகளில் தமிழ் போதனமொழியாதல் பற்றியும் அரசியலார் ஆவன செய்வார்களாக.

## (ரு) ஒற்றுமைக்கு ஒரேவழி ஆங்கிலமே

"நாட்டு மக்களிடையே மாநிலப்பற்று வளர்ந்து வருகிறது. இந்நிலை நீடிக்குமானால் மாணவர்களும் அலுவலர்களும் தம் இடம் விட்டுப் பிறவிடங்களுக்குச் செல்ல விரும்பமாட்டார்கள். இதனால் இந்தியா சிறுசிறு நாடுகளாகத் தனித்தியங்கும் நிலை ஏற்படும். இம் மாதிரியான சிதைவுகள் ஏற்படாவண்ணம் காக்க மக்களிடையே ஒற்றுமையை உண்டுபண்ண, ஆங்கிலம் ஒன்றினால்தான் முடியும். ஆங்கில இதழ்கள் நாட்டில் பரவுவதால் மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள தொடர்பினைக் கண்டேனும் அரசியலார் ஆங்கிலத்தின் இன்றியமையாமையை உணர்வார்களாக." என்று கடந்த 30—8—58-இல் இலக்குமிபுரம் இளைஞர் கழகச் சார்பிலும், மயிலை இளைஞர்கலைக் கழகச் சார்பிலும் நடைபெற்ற கூட்டத்தில் திரு. சி. இராசகோபாலாச்சாரியாரவர்கள் பேசியுள்ளார். கூட்டத்திற்குத் திரு. எம். இரத்தினசாமி தலைமை தாங்கினர். அவர் பேசிய காலை,

"ஆங்கிலத்தின் இன்றியமையாமைபற்றி நாங்களெல்லாம் பல தடவை எடுத்துக் கூறியும் அரசியலார் அதனைப் புறக்கணித்து வருகின்றனர். கட்சிப்பற்றுக் காரணமாகவும் மக்கள் அவையில் பெரும்பான்மைப் பலம் உள்ளது என்ற காரணத்தாலும் இந்திக்கு ஆதரவு தேடுவார்களானால் வடக்கு தெற்கு என்ற வேற்றுமை வளரும்; அது மேலும் நீடிக்குமானால் நாட்டின் ஒற்றுமையே கெடும்," என்று கூறினார்.

குறிப்பு: நல்ல அறிவுரைகள்! அதுமட்டுமன்று, இஃது அரசியலார்க்கு அறிஞர்கள் தந்துள்ள அறைகூவலுமாகும். இவர்களைப் போன்ற அரசியல் அறிஞர்களின் கருத்துக்களுக்கு மதிப்புத் தருவதைப் பொறுத்தே இருக்கிறது "ஏக இந்தியா" என்னும் பேச்சு.

# மதிப்புரை

"தென்னிந்திய தமிழ்ச் சாசனங்கள்"

[இதன் ஆசிரியர் திரு. வித்துவான் வ. தங்கையா நாடார் அவர்கள் (Senior Tamil Pandit, Cathedral High School, Palayamkottai) ஆவர். இதன் விலை ரூபா 3-50. கிடைக்குமிடம்-தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகம், 1/140, பிராடுவே, சென்னை-1.]

இந்நூலின்கண் "தந்திவர்மன் சாசனம்" முதல் "வீரபாண்டியன் சாசனம்" ஈறாக முப்பது சாசனங்கள் காணப்படுகின்றன. இவைகள் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் வித்துவான் கீழ்க்கலைத் தேர்வுகளுக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. 1954 முதல் பி.ஏ. ஆனர்சு, எம்.ஏ. தேர்வுகளுக்கும் இவைகள் பாடமாக இருந்து வருகின்றன.

இந்நூலாசிரியர் மிகுந்த உழைப்பெடுத்து எவ்வெவ்வகையாலெல்லாம் கற்கும் மாணவர்களுக்கு எளிதாகவும் விளக்கமாகவும் புரியும்படி ஆக்கலாமென்று செம்மையுற அமைத்துள்ளார்கள். எனவே இந்நூல் கற்பார்க்கு ஏனைய நூல்களிலும் பெருந்துணைபுரியும் வகையாக விளங்குகின்றது.

இதன்கண் ஒவ்வொரு சாசனத்தின் முன்னர் முன்னுரையொன்று காணப்படுகிறது. அஃது அச் சாசனம் தோன்றிய காலம், இடம், அரசர், மொழி, எழுத்துவகை வரி முதலியவற்றைத் தெளிவாக விளக்குகின்றது. மேலும் அடிக்குறிப்பில் அவ்வவ்வரசர் வரலாறுகளும், விளக்கங்களும், சாசனமுடிவில் சிறந்த பயிற்சி வினாக்களும் காணப்படுகின்றன. இத்துணைச் சிறந்தநூல் தமிழ்நாட்டு மெய்வரலாறுணர்ந்து நாடும் மொழியும் நன்னெறியும்பேணும் நன்னோக்கமுடைய நன்மாந்தர் பலர்க்கும் பெருந்துணைபுரியும் வரலாற்று விளக்கமாகும். அதனால் இந்நூல் பெருமக்களாலும், ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் வாங்கியும் வாங்குவித்தும் கற்றுப் பயனெய்துதற்கு உரிய சீரிய நூலாகும். இஃது இருநூற் றெழுபத்தாறு பக்கங்களைக்கொண்ட நல்ல பதிப்பாகும். ஆசிரியர் உரைநடையும் விளக்கமும் இனிமையும் எளிமையும் வாய்ந்தன. இன்றியமையாப் பல மேற்கோள்களும், தமிழ்ச சாசன வரலாறும் ஆராய்ச்சியும் காணப்படுகின்றன. இதனை எல்லாரும் பெற்றுக் கற்றுப் போற்றுதல் இன்றியமையாக்கடனாகும்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.